Follow us

# தமிழன்

THAMILAN தமிலන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 522 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (17.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 15 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## தேசபந்து, சனத் நிஷாந்த கைது செய்யப்படலாம்?

### பொலிஸ் திணைக்களத்தை நேற்று முற்றுகையிட்ட பல்கலை மாணவர்கள்

(யோ.தர்மராஜ்)

நாட்டில் கடந்த 9ஆம் திகதி 'கோட்டா கோ கம' மற்றும் 'மைனா கோ கம'வில் தாக்குதல் நடத்திய வன்முறைச் சம்பவம் தொடர்பில் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்...

12 பக்கம்

## அமைச்சுப் பதவிகள் ஏற்பது குறித்து ரணில் - மைத்ரி பேசி முடிவெடுப்பர்

### தயாசிறி எம்.பி. கருத்து

(யோ.தர்மராஜ்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்பது குறித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன பேச்சுவார்த்தை நடத்தி இறுதி முடிவை எடுப்பார்கள் - என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில்...

02 பக்கம்

## எரிபொருள் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம்!

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

மூன்று நாட்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என எரிசக்தி அமைச்சு, பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

போதுமானளவு எரிபொருள் காணப்படுவதாகவும் அவற்றை விநியோகிக்கும் வரை வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் எனவும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ட்விட்டர் பதிவினூடாக தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# நட்பு நாடுகளின் உதவி கிடைக்கும்: சிரமத்திலிருந்து நாம் மீள்வோம்!



## எரிபொருள், மருந்து கிடைக்க உடனடி ஏற்பாடு என்கிறார் பிரதமர் ரணில்

- நிவாரண வரவு-செலவுத் திட்டம் விரைவில்
- ஸ்ரீலங்கன் தனியார்மயமாகும்
- அடுத்த சில மாதங்கள் நெருக்கடி - ஆனாலும் பிரச்சினையை தீர்ப்பேன்

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஷ்டமான காலத்திற்கு முகங்கொடுக்கப் போகின்றோம்...

02 பக்கம்

## 10 அரசியல் கட்சிகள் ரணில் அரசுக்கு ஆதரவு

### உதய கம்மன்பில அறிவிப்பு

(யோ.தர்மராஜ்)

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்பதற்காக அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளாது பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

02 பக்கம்

## அரசுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி முடிவு

### எம்.பிக்களை உடைத்தெடுக்க வேண்டாமெனவும் வலியுறுத்து

(யோ.தர்மராஜ்)

புதிய அரசாங்கம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கத்தின் பதவிகளை பெற்றுக் கொள்ளாது முழுமையான ஆதரவை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி...

02 பக்கம்

## ரணில் அரசை ஆதரிப்போரை வன்மையாகக் கண்டிக்கிறோம்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் அறிவிப்பு



முதுகெலும்பில்லாத இந்திய அரசின் அடிவருடிகளான சில தமிழ்க் கட்சிகள் விழுந்துவிழுந்து ரணில் விக்ரமசிங்கவை வரவேற்று மக்களுக்கு உண்மையைச் சொல்லாது கோட்டாபயவை எதிர்க்கின்றோம் என பொய் கூறி மலசலகூடம் செல்வதற்குக்கூட கோட்டாபயவிடம் கேட்டு செல்லும் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிப்பது முற்றிலும் கண்டிக்கப்பட வேண்டியது - என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

இந்திய அரசின் எடுபிடிகளாக செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்படுகின்றன. அதேபோல் எங்களை தோற்கடிப்பதற்காக தாங்கள் ஒரு தேசியவாதியென நடிக்கிறவர் அமைச்சர்...

12 பக்கம்

## எரிபொருள் பெறுவதற்காக நீண்ட வரிசைகளில் மக்கள்



(படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன)

நாட்டில் தொடர்ந்தும் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதை காணக்கூடியதாக உள்ளது.

அதன்படி கொழும்பின் பல பகுதிகளிலும் நேற்றும் டீசல் மற்றும் பெற்றோல் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் வரிசைகளில் காத்திருந் தனர். மேல்மாகாணத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களும் நேற்று மூடப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனைத்து பாடசாலைகளும் இன்று திறக்கப்படும்

அனைத்து பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை, கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எந்த வகையிலும் பிற்போடப்படமாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

## மிக் கொள்வனவே லசந்த கொலைக்கான காரணம்

### தப்பிச் சென்ற முன்னாள் பொலிஸ் அதிகாரி சாட்சியம்



லசந்த விக்ரமதுங்கவின் கொலை வழக்கு தொடர்பில் தாம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், த சண்டே லீடர்...

12 பக்கம்






## இடைக்கால அரசின் பொருளாதார அரசியல் திட்டங்களை விளக்குக!

### ரணிலிடம் கேட்கும் சம்பிக்க



(யோ.தர்மராஜ்)

2015 ஆட்சிக் கவிழ்ப்பின்போது பொருளாதார மற்றும் அரசியல் செயற்பாடுகள் அடங்கிய 100 நாள் வேலைத்திட்டத்தை முன்வைத்து நீங்கள் காட்டிய வெளிப்படைத்தன்மையை தற்போதும் காட்ட வேண்டும் என்பதோடு, இப்போது, அமைக்கவுள்ள இடைக் கால அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதார...

02 பக்கம்




இ.தொ. காவுக்கு அமைச்சுப் பதவியை வழங்குவதாக கூறி காலைவாரி விட்டாராம் ரணில். அதனால் சஜித்துக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது அக்கட்சி. அதேவேளை, நேற்று ரணிலை சந்தித்த சுமந்திரன், மனோ, ஹக்கீம் ஆகியோர் கட்சிகளை உடைத்து எம்.பிக்களை எடுக்கும் வேலைகளை செய்யவேண்டாமென ரணிலை கேட்டுக்கொண்டனராம்.

## சாதாரண தரப் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்குத் தடை

### இன்று நள்ளிரவு முதல்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு இன்று (17) நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தை பரீட்சைகள் திணைக்களத்தின்...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



ஒரு காலத்தில உந்த சிங்கள அரசியல்வாதிகள் ரணில என்ன ஏச்சு ஏசினாங்கள்....?

## யாழ். பல்கலையை வந்தடைந்த முள்ளிவாய்க்கால் பேரணி

(யாழ். நிருபர்)

வல்வெட்டித்துறையிலிருந்து ஆரம்பித்த முள்ளிவாய்க்கால் நோக்கிய பேரணி யாழ். பல்கலைக் கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை...



02 பக்கம்

## தேவையற்ற பயணப்பொதிகளை பஸ்களில் கொண்டுசெல்ல தடை

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

(யோ.தர்மராஜ்)

நாட்டில் இன்றுமுதல் வழமைபோன்று பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதால் பொதுமக்கள் அச்சமின்றி பயணிக்கலாம். எனினும், பஸ்களில் தேவையற்ற பொதிகளைக் கொண்டுசெல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே...

02 பக்கம்

## தேவையற்ற...

அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்து நாங்கள் நாளை (இன்று) டீசலை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதனால், நாளை முதல் மக்கள் எவ்வித சந்தேகமும் அச்சமுமின்றி தங்களுடைய பயணங்களை முன்னெடுக்க முடியும்.

கொழும்பு உள்ளிட்ட பகுதிகளுக்கு இன்று (நேற்று) டீசல் கிடைத்துள்ளதால் அதற்கமைய நாளை (இன்று) முதல் போக்குவரத்துகள் வழமைபோன்று இடம்பெறும். இதேவேளை, தாக்குதல் தொடர்பாக இந்திய புலனாய்வு துறையினரிடமிருந்து தகவல் கிடைத்துள்ளது. பஸ்களில் பயணிக்கும் பயணிகளை பாதுகாக்கும் பொறுப்பு எங்களுக்குள்ளதால், பஸ்களில் தேவையாற்ற பொதிகளைக் கொண்டுசெல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. பஸ்களில் தங்களுடைய பொதிகளை வைக்க வேண்டாம். முடிந்த வரை உங்களுடைய கைகளிலேயே பொதிகள், பைகள் போன்றவற்றை வைத்துக்கொள்ளுங்கள்.

பாதுகாப்பான முறையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதோடு, பஸ்களில் பயணிக்கும் பயணிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்குள்ளதால் சந்தேகத்துக்கிடமான முறையில் பொதிகளை யாரும் வைத்திருந்தால் பொலிஸாருக்கு தகவல் கொடுக்குமாறும் நடத்துனர்களுக்கு அறிவித்துள்ளதோடு, பொது மக்களை பாதுகாப்பாக கொண்டுசெல்லுமாறும் அறிவித்துள்ளோம். எனவே, இனி பஸ்களில் பயணிக்கும்போது, அவதானத்துடனும் பாதுகாப்புடனும் பயணிக்க வேண்டும்.

ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக இந்திய உளவுத்துறை தகவல் வழங்கியிருந்தது. எனவே, தற்போது வழங்கப்பட்டுள்ள தகவலை கவனத்தில் கொள்ளாது செயற்பட வேண்டாம். மக்களை பாதுகாக்கும் பொறுப்பு குறித்து பொலிஸ்மா அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். எனவே, தாங்கள் கொண்டுவரும் பொதிகளை தாங்களே வைத்துக்கொள்ள வேண்டும். வேறு எங்கும் வைத்தால் அது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்படும் - என்றார்.

## அமைச்சுப் பதவிகள்...

நேற்று (16) இடம்பெற்ற பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானங்கள் எடுக்கும் போது, கட்சி ரீதியாக எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய செயற்படுவதே எங்களுடைய நிலைப்பாடாகும். அதன்படி, பிரதமருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது, ஏதேனும் வேலைத்திட்டங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுமாயின், கட்சியின் தலைவருடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானங்களை எடுக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்தோம்.

அதன்படி, நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசாங்கம் எடுக்கும் அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் பிரதமருக்கு தெரிவித்தோம்.

இதேவேளை, அமைச்சுப் பதவிகள் தொடர்பாக பேசப்படவில்லை. எனினும், கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி முடிவை எடுக்குமாறு பிரதமரிடம் கூறியுள்ளோம் - என்றார்.

## யாழ்.பல்கலைக்கழக...

நேற்றைய தினம் திங்கட்கிழமை வந்தடைந்தது. இதன்போது பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு தீபமேற்றி மலரஞ்சலி செய்யப்பட்டு பல்கலைக்கழக மாணவர்களால் பேரணியாக வந்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

“இன விடுதலையை தேடி முள்ளிவாய்க்காலை நோக்கி” என்ற கருப்பொருளில் இடம்பெறும் இந்தப் பேரணி வடக்கு மாகாணத்திலிருந்து நேற்றுக்காலை ஆரம்பமானது.

இவ் அஞ்சலி நிகழ்வில் சிங்கள மாணவர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நட்பு நாடுகளின்...

இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால், இது குறுகிய காலத்திற்கு மட்டுமே. எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால் இதிலிருந்து நாம் மீள முடியும். அதன்பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

கடந்த வியாழக்கிழமை நான் பிரதமர் பதவியை பொறுப்பேற்றேன்.அந்தப் பதவியை நான் கேட்கவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு, ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார். நான் அரசியல் தலைவராக மட்டுமின்றி, இலவசக் கல்வியை அனுபவித்து கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் பட்டம் பெற்று உயர்ந்த தேசியத் தலைவர் என்ற வகையிலே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. 2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபா வருமானமாக உள்ளதாக காட்டப்பட்டாலும் இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வு கூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாவாகவே உள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபா. எவ்வாறாயினும், கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான அரசின் மொத்த செலவு 4 ட்ரில்லியன் ரூபாவாகும். வருடத்திற்கான வரவு-செலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாவாகவுள்ள அதேவேளை, அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும்.

அதேபோன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3200 பில்லியன் ரூபாவாகும். நாம் மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது 1950 மில்லியன் ரூபாக்களை செலவு செய்திருந்தோம். அதன்படி அண்ணளவான மிகுதி 1250 மில்லியன் ரூபாவாகும். நாம் நேற்று அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட எல்லையை 3000 பில்லியனில் இருந்து 4000 பில்லியன் வரை அதிகரிக்கும் யோசனை ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்க தீர்மானம் ஒன்றை எடுத்தோம்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நிய செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால், இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக்கூட தேடிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும்பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சினால் தேடிக்கொடுக்க முடியாதுள்ளது.

இவ்வனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாம் முகம்கொடுக்கும் மிகமோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர்வரும் சிலநாட்களில் வரிசைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மிகவிரைவில் சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை தேடவேண்டியுள்ளது. இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்று வந்த டீசல் கப்பலால் இன்றிலிருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். இந்திய கடனுதவித் திட்டத்தின்கீழ் மே 19 மற்றும் ஜூன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்களும் வரவுள்ளன. இன்றுவரை 40 நாட்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகுஎண்ணெய், எண்ணெய் ஏற்றிவந்த கப்பல்கள் 3 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலர்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாட்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. ஆனால், நாம் இதற்கு தேவையான நிதியை தேடிக்கொண்டுள்ளோம். அதேபோன்று, முடிந்தளவு நுகர்வோருக்கு எரிவாயுவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை கூடிய விரைவில் தேடவேண்டும். மண்ணெண்ணெய் மற்றும் அது சம்பந்தமான நிலைமை இதனைவிட பயங்கரமானது. இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர்களின் அளவு மிகவும் சிறியது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இவ்வனைத்து சிரமங்களுக்கு மத்தியிலும் நேற்று டீசல் ஏற்றிய கப்பல் ஒன்றை கொண்டு வந்தோம். அதனால் இன்று முதல் அந்த டீசலை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். அதன்பொருட்டு இந்தியாவின் ஒத்துழைப்பு நமக்கு கிடைத்தது. அதேபோன்று வந்துள்ள எரிவாயு கப்பலுக்கான கட்டணத்தை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் செலுத்த நாம் நடவடிக்கை எடுப்போம். அதன் மூலம் உங்களின் எரிவாயு பிரச்சினைகளுக்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கும்.

இதற்கிடையில், மற்றுமொரு உதாரணம் மருந்துகளுக்கான தட்டுப்பாடு. இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உட்பட பல மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை தொகை 34 பில்லியன் ரூபாவாகும். அதேபோன்று அரச ஔடதக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அதனால் அவர்களை கறுப்புப்பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. 14 அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருந்து வழங்கள் பிரிவிற்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது. இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால், விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்துக்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

இதற்கிடையில் 2022ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவு-செலவுத் திட்டத்திற்கு பதிலாக புதிய வரவு-செலவுத் திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவு-செலவுத் திட்டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன்.

அதேபோல், இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் விமான சேவையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன் . 2020 - 2021இல் மட்டும் ஸ்ரீலங்கன் விமான சேவை 45 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது. 2021 மார்ச் 31 ஆகும்போது இதன் மொத்த நட்டம் 372 பில்லியன்களாக இருந்தது. நாம் இதனை தனியார் மயப்படுத்தினாலும் இந்த நட்டத்தை நாமே ஏற்க நேரிடும். இந்த நட்டத்தை வாழ்க்கையில் ஒருமுறையாவது விமானத்தில் பயணிக்காத இந்த நாட்டின் ஏழை எளிய மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுகிய காலத்திற்கு நாம் இதனை விட மோசமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம். பணவீக்கம் மேலும் அதிகரிக்க இடமுள்ளது.

அரசாங்கம் தற்போது 92 பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ.84.38, 95 பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ.71.19, டீசல் லீற்றர் ஒன்றில் ரூ.131.55 சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றில் ரூ.136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றில் ரூ.294.50 என நட்டமடைகின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இந்த நட்டத்தை மேலும் தாங்கிக்கொள்ள முடியாது. அதேபோல இலங்கை மின்சாரசபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ.17ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபா வரை செலவு செய்கிறது. அதன்படி ஒரு அலகிற்கு 30 ரூபா நட்டம் ஏற்படுகிறது. அதுவும் மோசமான சிக்கலாகும்.

நான் இந்த நேரத்தில் விருப்பப்படாவிட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும் உங்களுக்கு தேவையான பொருட்கள், சேவைகளின் பொருட்டே அதனை செய்யவுள்ளது. எவ்வாறாயினும், பணத்தை அச்சடிப்பதால் ரூபாவின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தற்போதைய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபைக்குத் தேவையான நிதியைக்கூட தேடமுடியாதுள்ளது. எவ்வாறாயினும், எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலக்கட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்.

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஸ்டமான காலத்திற்கு முகம் கொடுக்க போகின்றோம். இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்திற்கு மட்டுமே. எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால் இதிலிருந்து நாம் மீள முடியும். அதன்பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்.

இந்த சந்தர்ப்பத்தில் தற்போதைய நிலைமை சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் உட்பட கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளித்தமை குறித்து அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தற்போது நிலவும் இந்த சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய சபை அல்லது அரசியல் சபை ஒன்றை அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

அதன் மூலம் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து எட்டப்படும் தீர்மானத்திற்கு அமைய நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொதுவான குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல எம்மால் முடியும். மண்ணெண்ணெய், எரிவாயு, எரிபொருள் வரிசை இல்லாத நாடு, மின்சாரம் துண்டிக்கப்படாத நாடு, விவசாயத்தை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள நாடு, இளைஞர் யுவதிகளின் நாளையதினம் பாதுகாக்கப்பட்ட நாடு, மனித வளம் போராட்டக்களத்தில் மற்றும் வரிசையில் வீணடிக்கத் தேவை இல்லாத நாடு, எல்லோரும் சுதந்திரமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய நாடு மற்றும் மூன்று வேளையும் உணவு உண்ணக்கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்.

நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதைவிட இது பயங்கரமான சவால் மிகுந்தது. மிகவும் ஆழமானது. அடியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் கழற்ற முடியாத பாதணிகள் போடப்பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையை பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இந்த சவாலை நான் நாட்டுக்காகவே பொறுப்பேற்றேன். எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் தனிமனிதன், ஒரு குடும்பம் அல்லது ஒரு கூட்டத்தை பாதுகாப்பது அல்ல. முழு நாட்டினதும் மக்களை காப்பாற்றுவதே. இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே. உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றிக்கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்.

நான் எனது கடமையை நாட்டுக்காக செய்து முடிப்பேன். அது நான் உங்களுக்கு அளிக்கும் உறுதியாகும் - என்றார் பிரதமர்.

## இடைக்கால அரசின்...

திட்டங்களை உடனடியாக எங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அதைப் பார்த்தே எந்த அளவில் உங்களுடைய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்பதை தீர்மானிக்க முடியும் என புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஜாதிக ஹெல உருமயவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அத்தோடு, தங்களால் முன்வைக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கும் புதிய பிரதமர் பதிலளிக்க வேண்டும் எனக்கோரி 5 கேள்விகளையும் முன்வைத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு நேற்று (16) அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் உக்கிரமடைந்துள்ளபோது, அதிகாரத்தை பொறுப்பேற்றுக்கொண்டு நாட்டை மீட்பதற்கு பலர் பல்வேறு காரணங்களைக் கூறி புறக்கணிக்கும் போது, நீங்கள் முன்வந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டதை வரவேற்கின்றோம். தற்போது உங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்ற போது, உங்களால் விளக்கமளிக்க வேண்டிய விடயங்கள் மற்றும் சில யோசனைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் முன்வைக்கின்றேன்.

நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைவதற்கு காரணமாக இருந்த, ராஜபக்ஷ அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையால் உக்கிரமடைந்த பொருளாதார நெருக்கடியானது, இளைஞர்களின் போராட்டங்களால் அரசியல் நெருக்கடியாக மாறியது. இந்த போராட்டங்களில் பொருளாதார தொனிப்பொருளை விட அரசியல் தொனிப்பொருளே முக்கியமாக இருந்தது. ராஜபக்ஷக்கள் அதிகாரங்களை கைவிடல், ஜனநாயக ரீதியான அரசியலமைப்பு திருத்தங்களை அறிமுகப்படுத்தல், ஊழல் மோசடிகளை தடுத்தல், நெறிமுறை அரசியலை உருவாக்குதல், இன, மத பேதங்களிலிருந்து விலகி மனித கௌரவத்தை பாதுகாக்கும் மக்கள்வாதி அரசாங்கத்தை உருவாக்குதல் போன்றனவே இந்த போராட்டங்களின் சாராம்சமாகும.

இந்த அரசியல் போராட்டத்தின் விளைவாகவே நீங்கள் பிரதமராக நியமிக்கப்பட்டீர்கள். ஆனால், ‘கோட்டா கோ கம’ போராட்டக்களத்தில் உருவாகும் அரசியல் கோரிக்கைகளுக்கு நீங்கள் வழங்கும் பதிலை நாட்டுக்கு வெளிப்படையாக முன்வைக்க வேண்டும். கோட்டா கோ கமவிற்கு பாதுகாப்புகள் வழங்குமாறு கூறுவது போதுமானதல்ல. இந்த நிலைமையை சில தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதோடு, தேர்தல் மற்றும் மக்களாணையை கோரும் போது, இந்த நெருக்கடியை தீர்ப்பதற்காக, நாடாளுமன்றத்தின் பொறுப்பை எடுத்து இடைக்கால சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தோம்.

அவ்வாறான அரசாங்கம் அமையுமாக இருந்தால் அதற்கு ஆதரவு வழங்குவது எங்களுடைய பொறுப்பாகும். நீங்கள் அங்கம் வகிக்கும் அரசாங்கம் அவ்வாறானதொரு அரசாங்கமாக உருவாக வேண்டுமாக இருந்தால், இளைஞர்களின் போராட்டக்களத்தில் உருவாகும் அரசியல் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நீங்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை நாட்டுக்கு முன்வைக்க வேண்டும். கீழ் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு நீங்கள் வெளிப்படையான பதிலை வழங்க வேண்டும்.

அதன்படி, 2022 மே 9ஆம் திகதி முழு நாட்டில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு வழிவகுத்த, கோட்டா கோ கமவிற்கு தாக்குதல் நடத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வன்முறை அரசியல்வாதிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நீங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் என்ன? அத்தோடு, இதன் பின்னர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் உயிர்கள் மற்றும் சொத்துகள் சேதமாக்கப்படுவது குறித்து நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் திகதி குறித்து உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளரா? அது தொடர்பாக நீங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

ஏப்ரல் தாக்குதலுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் குறைபாடுகள் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டு, புதிய சுயாதீன விசாரணை ஆரம்பித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு நீங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து, சுயாதீன நீதிமன்றம், பொலிஸ், அரச சேவை, தேர்தல், கணக்காய்வு ஆணைக்குழு போன்றவற்றை பலப்படுத்தும் 21ஆவது அரசியலமைப்பை கொண்டுவருவதற்கு நீங்கள் இணக்கம் தெரிவிக்கும் காலப்பகுதி என்ன?

கட்சிகளின் உள்ளக ஜனநாயகம், நிதி ஒழுக்கம், சமூகம் தொடர்பான பொறுப்பு மற்றும் தேர்தலின்போது ஊடகங்களை அரசியல் கட்சிகளுக்கு சார்பாக செயற்படுதலை தடுத்தலை உறுதி செய்யும் தேர்தல் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நீங்கள் விரைவாக நடவடிக்கைகள் எடுப்பீர்களா?

இதேவேளை, நாட்டில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வற்கு நீங்கள் முன்வைக்கும் யோசனைகளை மக்களுக்கு முன்வைக்க வேண்டும்.

அதேபோன்று, 2015 ஆட்சிக்கவிழ்ப்பின் போது பொருளாதார மற்றும் அரசியல் செயற்பாடுகள் அடங்கிய 100 நாள் வேலைத் திட்டத்தை முன்வைத்து நீங்கள் காட்டிய வெளிப்படைத்தன்மையை தற்போதும் காட்ட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடாகும். எனவே, நீங்கள் அமைக்கவுள்ள இடைக்கால அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதார திட்டங்களை உடனடியாக எங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அதைப் பார்த்தே எந்த அளவில் உங்களுடைய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்பதை தீர்மானிக்க முடியும்.

## 10 அரசியல்...

10 அரசியல் கட்சிகளுக்கும் பிரதமருக்கும் இடையில் நேற்று (16) பிரதமர் அலுவலகத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் அங்கிருந்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்பதற்கு கட்சி பேதங்களை தாண்டிய அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்தார். இந்த நிலையில் ஏப்ரல் 8ஆம் திகதிய கடிதத்தில் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற யோசனையை நாங்களே முன்வைத்தோம் என்பதை பிரதமருக்கு நினைவூட்டினோம்.

இதேவேளை, அனைத்து கட்சித் தலைவர்களையும் உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றை அமைப்பதற்கும் பிரதமர் எதிர்பார்த்துள்ளார். நாடாளுமன்றத்திலும் நிதிக்குழு 5 உள்ளிட்ட 15 குழுக்களை உருவாக்கி, அதன் தலைமை பதவிகளை ஏற்றுக்கொள்ளுமாறு, அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளாத கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இதனூடாக அனைவரையும் அரசாங்கத்துக்குள் இணைத்துக் கொள்வதற்கும் பிரதமர் எதிர்பார்த்துள்ளார்.

எனவே, எங்களுக்கு அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லை என்றாலும் நாட்டை மீட்பது முக்கிய தேவை என்பதால் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்ளாது அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம். எங்களுக்கு அமைச்சுப் பதவிகள் முக்கியமல்ல. அமைச்சுப் பதவிகள் ஏற்றுக்கொள்பவர்களுக்கு பொறுப்பை வழங்கி, நாட்டை மீட்பதே தற்போதைய தேவையாகவும் எங்களுடைய நோக்கமாகவும் உள்ளது.

மேலும், தற்போதைய நிலைமையை கருத்தில்கொண்டு, டிசம்பர் மாதம் வரையான திட்டங்களை உள்ளடக்கிய, புதிய வரவு – செலவுத் திட்டத்தையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை மருந்து, எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் போன்றவற்றை தொடர்ச்சியாக வழங்குவதற்கே தற்போது அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாகவும் பிரதமர் இதன் போது சுட்டிக்காட்டினார். இதற்காக, எங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்குவோம் என்பதையும் நாங்கள் தெரிவித்துள்ளோம்.

அதேபோன்று, 21ஆவது திருத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நாங்கள் முன்வைத்துள்ள வரைபு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள்...

டீசல் ஏற்றிய கப்பலொன்று நேற்றுமுன்தினம் (15) நாட்டை வந்தடைந்ததாகவும் இந்திய கடன் வசதியின் கீழ் எதிர்வரும் 2 வாரங்களுக்குள் எரிபொருள் ஏற்றிய மேலும் 03 கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வெசாக் பூரணை தினம் காரணமாக நேற்று முன்தினம் (15) எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என அமைச்சர் கூறினார்.

எவ்வாறாயினும், எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நேற்று 16) ஆரம்பிக்கப்பட்டதாக இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சியசாலை கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாட்டை வந்தடைந்துள்ள 37,000 மெட்ரிக் தொன் டீசலை ஏற்றிய கப்பலிலிருந்து எரிபொருளை தரையிறக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மருந்து, எரிபொருள், எரிவாயு, மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கொண்டுசெல்லும் லொறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக எரிபொருளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட செயலாளர்கள் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டிய லொறிகள் தொடர்பான ஆவணம் கையளிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சாதாரணதர...

இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரங்கள் இதுவரை கிடைக்கவில்லையெனின், பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து, அதன் முதற் பக்கத்திலுள்ள எமது சேவைகள் எனும் நிரலின் கீழுள்ள க.பொ.த. சாதாரண தரம் 2021 அனுமதிப்பத்திர பதிவிறக்கம் பகுதியை தெரிவு செய்து, சரியான தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது பரீட்சை இலக்கத்தை குறிப்பிட்டு அனுமதிப் பத்திரத்தின் பிரதியை பதிவிறக்கம் செய்ய முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

## அரசுக்கு ஆதரவு...

தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று (16) இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது மிகவும் அத்தியாவசியமான பொறுப்பாகும் என ஐக்கிய மக்கள் சக்தி நம்புகிறது.

இதனால், தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளும் நலன்சார்ந்த வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கத்தில் பதவிகள் எதனையும் பெற்றுக்கொள்ளாது, நாடாளுமன்ற செயல் முறையின் கீழ் பூரண ஆதரவை வழங்க ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் சாதகமாக்கிக்கொள்ள மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அப்பால், நாடாளுமன்ற உறுப்பினர்களை, ஆளுங்கட்சியின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் செயற்பாடுகள் ஏதும் முன்னெடுக்கப்படுமாக இருந்தால், தாங்கள் வழங்கும் ஆதரவை நிபந்தனையின்றி விலக்கிக்கொள்வதாகவும் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# இருதய நோயாளர்களுக்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சின் செயலாளர் தகவல்



இருதய நோயாளர்களுக்கான மருந்துகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட மருந்துவப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முணசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் நோயாளிகளுக்கு உணவு விநியோகத்தை மேற்கொண்டவர்களுக்கு 04 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்களை சுகாதார அமைச்சு பகிரங்கப்படுத்தியபோதிலும், டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவில்லை.

இந்நிலையில், இருதய நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவு கின்றது.

மருந்து இறக்குமதி நடவடிக்கைகள் சீராகும் வரை இந்த தட்டுப்பாட்டை சீராக்குவதற்கான மாற்று நடவடிக்கை அவசியம் என்றும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.



ஒருகொடவத்தை பகுதியில் நேற்று (16) நண்பகல் வேளையிலும் வீதி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# ஆரியகுளத்தில் மத அடையாளங்களுக்கு இடமில்லை; யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பரிபாலிக்கப்படும் ஆரியகுளத்தினுள் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்குமாறு படைத்தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை யாழ். மாநகர சபை நிர்வாகம் நிராகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையும், நேற்று திங்கட்கிழமையும் வெசாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்ற நிலையில் நேற்று முன்தினம் யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட படை அதிகாரி ஒருவர், ஆரியகுளத்தினுள் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கையை முன்வைத்தார். எனினும் ஆரியகுளம் பகுதியில் எந்தக் காலத்திலும், எந்த மத அடையாளங்களையும் காட்சிப்படுத்த அனுமதிப்பதில்லை என யாழ். மாநகர சபையில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தீர்மானம் இயற்றப்பட்டிருப்பதனால், சபை அனுமதி இல்லாமல் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்க முடியாது என ஆணையாளர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதனையடுத்து, ஆணையாளருடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஆரியகுளத்தினுள் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்குமாறும், தவறும் பட்சத்தில் தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணம் மாநகர சபையைக் கலைக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்ததையடுத்து யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று ஆணையாளரினால் நிகழ்நிலையில் நடத்தப்பட்டது. யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் விடுமுறையில் வெளிநாடு சென்றிருப்பதனால், பிரதி முதல்வர் து.ஈசன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. மாநகர முதல்வரும் வெளிநாட்டிலிருந்தவாறே கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

வெசாக் கொண்டாடப்படும் திகதி நிர்ணயிக்கப்பட்ட ஒரு தினம் ஆகையால் போதிய கால இடைவேளையில்லாமல் வெசாக் தினத்தன்று, அதுவும் தொலைபேசி வாயிலாக அனுமதி கோரப்பட்டமை உறுப்பினர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், முறையான எழுத்து மூல அனுமதி கோரப்படுமிடத்து அதுபற்றி பரிசீலிக்கலாம் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். இது பற்றி வடக்கு மாகாண ஆளுநருக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குறிஞ்சிப்பிட்டி பகுதியில் கார் விபத்து சீனப் பிரஜை ஒருவர் பலி; இருவர் காயம்



(ரஸீன் ரஸ்மின்)

பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியின் குறிஞ்சிப்பிட்டி பகுதியில் நேற்று (16) இடம்பெற்ற வீதி விபத்தில் சீனப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் தங்கியிருந்த சீனாவைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வியாபார நோக்கத்திற்காக புத்தளம் - கற்பிட்டி பகுதிக்கு வருகை தந்த சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட இருவர் பயணம் செய்த சொகுசு கார் விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்றபோது, பாலாவி பகுதியிலிருந்து கற்பிட்டி பகுதியை நோக்கி சீனர்கள் பயணித்த சொகுசு கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த வேகத்தை குறித்துக் காட்டும் இரும்புக் கம்பி ஒன்றின் மீது மோதியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், விபத்துக்குள்ளான கார் வீதியில் கவிழ்ந்து சுமார் 50 மீற்றர் வரை இழுத்துச் சொல்லப்பட்டு, வீதியோரத்தில் உள்ள தொலைபேசி தூண் ஒன்றின் மீதும் மோதி கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அங்கிருந்தவர்கள் உடனடியாக அந்த சொகுசு காரில் பயணம் செய்த பெண் உட்பட இருவரையும் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், குறித்த வாகனத்தை செலுத்திச் சென்ற சீனரான 45 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், காயமடைந்த சீன நாட்டு பெண் தொடர்ந்தும் கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தில் உயிரிழந்த நபரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக பேலியகொடை, ஒருகொடவத்தை ஆகிய பகுதிகளில் நீண்டவரிசையில் வாகன சாரதிகள் நேற்று (16) காத்திருந்ததை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)



ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் தூதுவரை நேற்று (16) சந்தித்து கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், அரபு இராஜ்ஜியத்தின் மன்னர் மறைந்த ஜனஸ் செஹின் கலீபா பின் செயிட்டுக்கு தனது அனுதாபத்தை இரங்கல் குறிப்பேட்டில் பதிவு செய்தார்.

# நாடு பூராகவும் மழை வீழ்ச்சி பதிவாகலாம்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

DEPARTMENT OF METEOROLOGY
SRI LANKA

தென் மேற்கு பருவமழை காரணமாக, நாடு பூராகவும் மழை வீழ்ச்சி பதிவாவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இடைக்கிடை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும் இன்று 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகலாம்.

வட மாகாணத்திலும் அநுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் மழைவீழ்ச்சி பதிவாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

மத்திய மலைநாட்டு பிரதேசங்கள், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் இடைக்கிடை மணித்தியாலத்துக்கு 40 – 50 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் ஏற்படக் கூடிய தற்காலிக கடும் காற்று மற்றும் மின்னலினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த தினங்களில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையின் காரணமாக ஆயிரத்து 820 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 337 பேர் பாதிப்படைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த அனர்த்தங்களினால், 203 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இந்த இயற்கை அனர்த்தங்களின் காரணமாக 52 குடும்பங்களைச் சேர்ந்த 209 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# நான் அரசாங்கத்தில் பங்கேற்கப் போவதில்லை

## சான் விஜயலால் எம்.பி.தெரிவிப்பு



கட்சி என்ன தீர்மானம் எடுத்தாலும், தான் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சான் விஜயலால் த சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பிரதமர் ரணில் விக்ரம சிங்கவுக்கும் இடையில் இன்று (நேற்று) இடம்பெற்ற கலந்துரையாடலில் தான் கலந்து கொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படாமல் இருக்கவும், அந்தக் கொள்கைகள் தொடர்பில் பின்பற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





கிங் கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதன் காரணமாக பத்தேகம நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக பத்தேகம – உடுகம வீதி வக்வெல்ல, கணேகம ஆகிய வீதிகளில் நேற்று (16) போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. (படப்பிடிப்பு: மகேஷ் டி சில்வா)




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 17ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# பொலிஸாரின் செயற்பாடு பக்கச்சார்பாக இருக்கலாமா?

நாட்டில் கடந்த 09 ஆம் திகதியும் அதற்குப் பின்னரான நாட்களிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் தலைமையகம் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 74 பேரின் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மேலும் 250 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள், நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 50 இற்கும் மேற்பட்ட வாகனங்களும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட நபர்கள் அலரி மாளிகைக்கு முன்பாக சிறிதுநேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் பின்னர் அவர்கள் அலரி மாளிகைக்குள்ளே அழைத்துச் செல்லப்பட்டு கூட்டமொன்று நடத்தப்பட்டது.

அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துவந்த நிலையில், மக்கள் நலன் சார்ந்து தீர்மானம் எடுப்பதாக அவர் அன்று அறிவித்தார். அத்துடன் பதவி விலகவா, வேண்டாமா என அங்கிருந்தோரின் அபிப்பிராயத்தைக் கேட்டு தனது உரையை நிகழ்த்தினார். அத்துடன் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்டோரும் அங்கு உரையாற்றினர்.

“பொறுமைக்கும் எல்லையுண்டு. இனி நாம் களத்தில் இறங்க வேண்டிய தருணம்” என அவர் உணர்ச்சி மிகைபடப் பேசினார்.

அதன் பின்னர் “காலிமுகத்திடலுக்குச் செல்வோம்” என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டுக்கொண்டு மைனா கோ கம, கோட்டா கோ கம ஆகியவற்றையும் அங்கு அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீதும் தாக்குதல் நடத்தினர்.

போராட்டக்களத்தில் இருந்தோர் தயவு தாட்சண்யமின்றித் தாக்கப்பட்டனர். அவர்களில் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தை இலத்திரனியல், சமூக ஊடகங்களில் நேரலையாக பார்த்துக் கொண்டிருந்த நாட்டு மக்கள் கடும் கோபமடைந்தனர்.

இதனால் மஹிந்த ஆதரவாளர்களை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியதுடன், அவர்களை ஏற்றிவந்த பஸ்களும் எரியூட்டப்பட்டன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள அரச ஆதரவு எம்.பிக்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் வாசஸ்தலங்கள், வாகனங்கள், சொத்துகள் என்பன எரியூட்டப்பட்டன.

இந்நிலையில், வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 230 நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டோரில் மேல் மாகாணத்தில் 71 பேரும், தென் மாகாணத்தில் 43 பேரும், மத்திய மாகாணத்தில் 17 பேரும், வடமேல் மாகாணத்தில் 36 பேரும், வடமத்திய மாகாணத்தில் 47 பேரும், சப்ரகமுவவில் 13 பேரும், ஊவாவில் இருவரும் வடக்கில் ஒருவரும் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காலி முகத்திடலில் அமைதிப் போராட்டம் நடத்தியோர் மீது தாக்குதல் மேற்கொண்ட ஒருவர் மாத்திரமே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தியோரின் புகைப்படங்கள் சமூக ஊடகங்களிலும், பிற ஊடகங்களிலும் வெளியாகியுள்ளன. அவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க பொலிஸாருக்கு நிறைய நாட்கள் தேவைப்படாது. ஆயினும், அவர்கள் ஏன் கைதுசெய்யப்படவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அவர்கள் திட்டமிடப்பட்ட வகையில் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள். தடிகளையும், இரும்புக் கம்பிகளையும் தாங்கியிருந்தார்கள். பொலிஸாருக்கு அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய சூழ்நிலை இருந்தும் அது வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டதாகவே சந்தேகம் எழுகிறது. உதாரணமாக மஹிந்த ஆதரவாளரான டேன் பிரியசாத் இரும்புக் கம்பியுடன் காலிமுகத்திடலில் இருக்கும் காணொளி மற்றும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. ஆயினும், அந்த நபரை பொலிஸார் கைதுசெய்யவில்லை.

அலரி மாளிகையில் நடத்தப்பட்ட கூட்டத்தின்போது நாமல் ராஜபக்ஷ எம்.பி.யின் முன்பாகவே காலிமுகத்திடலுக்குச் செல்லப்போவதாக அங்கிருந்தோர் கூக்குரலிட்டனர். அவர்களால் மிலேச்சத்தனமாக நடத்தப்பட்ட தாக்குலுக்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் பொறுப்புக் கூற வேண்டும். அத்துடன், போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் ஒருவரை மாத்திரமே பொலிஸார் கைதுசெய்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாததாகும். காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டமைக்கு பொலிஸாரின் ஆதரவும் ஒரு காரணம் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு இவ்வாறான விடயங்கள் சான்றுப்படுத்துவனவாகவே அமைந்திருக்கின்றன.

# காக்கைச் சிறகுக் கோட்பாட்டில் காணாமல் போனவர்கள் எத்தனை பேர்?

• அப்ரா அன்ஸார்







இரகசியங்கள் ஒன்றுக்கொன்று பிரிந்து வாழும் இந்த உலகில் நாம் வாழ்ந்தாலும், அதே உலகிலே தான் வாழ்ந்து மடிகிறோம். அதுவே நியதி. இந்த உலகில் காக்கைச் சிறகுக் கோட்பாட்டில் காணாமல் போனவர்கள் எத்தனை பேர்? காக்கையைக் கொன்று மரத்தில் தொங்கவிட்டால் காகம் திரும்பி வராது என்பதுதான் இந்த பூமியின் உண்மை. அவை நீண்ட காலமாக இருந்து பல காகங்களைக் கொன்று இறக்கைகளை தொங்கவிட்டது. அதன்போது மற்ற காகங்கள் அமைதி காத்தன. அப்படித்தான் சமூகம் சமநிலையைக் காத்து வந்தது. ஆனால், கொலைசெய்யப்பட்ட காகங்கள் ஒரு காலத்தில் பேயாக வெளிவர ஆரம்பித்தன. அவை ஒன்று சேர்ந்து “காக் கா..” என்கின்றன. பெரும்பாலான மனிதர்கள் காகத்தின் சிறகுகளாக இவ்வுலகிலிருந்து மறைந்தனர். காகமும் கறுப்புத்தான், காலமும் கறுப்புத்தான், வரலாறும் கறுப்புத்தான். இருக்கின்றவர்களை விட இறந்தவர்கள் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை இன்றைய நிலை நிரூபித்துள்ளது.

**பின்னணி**

பிரபல ரக்பி வீரர் வஸீம் தாஜூதீன் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் (17) 10 வருடங்கள் பூர்த்தியாகி உள்ளது. கடந்த 2012 மே 17 ஆம் திகதி வஸீம் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரது உடல் காருக்குள் நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்துக்கு அருகிலிருந்து மீட்கப்பட்டிருந்தது. எனினும், இன்றுவரை குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என்பதோடு, அவருடைய கொலையுடன் தொடர்புடைய வழக்கையும் தொடராது மூடிவிட்டார்கள். கொலையாளிகள் கைதுசெய்யப்படாமல், கொலைகாரனும் மாயமாக மறைந்து போன நிலை. நல்லாட்சி மலர முக்கிய பங்கு வஸீம் தாஜுதீன் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைப் பிடிப்போம் என்று வாக்குறுதி அளித்ததுதான். அதன் பின் 2019ஆம் ஆண்டு கோட்டா அரசுடன் இந்த விவகாரம் முற்றுமுழுதாக மூடப்பட்டது. கடந்த வருடம் இந்தக் கொலையுடன் தொடர்புடைய முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார். அவருடைய இறப்பும் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தது. இந்தக் கொலை தொடர்பான அனைத்து விடயங்களும் புரியாத புதிராகவே உள்ளன. சி.சி.ரி.வி. காட்சிகள் உறுதிசெய்த விடயங்களை வைத்து குற்றவாளிகளைக் கைதுசெய்வோம் என்று கூறியவை வெறும் ஆறுதல் வார்த்தைகளாகவே போனது.

குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்ற நாளன்று அலரி மாளிகையிலிருந்து சென்ற நான்கு வாகனங்கள் மற்றும் அவற்றின் பயணங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படுவதாகவும் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பாளர்களாக கடமையாற்றிய இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரிகள் சிலரின் கடற்படைப் பயணங்கள் சம்பந்தமாகவும் விசாரணை செய்யப்படுவதாகக் கூறிய முன்னாள் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல், அவர்களின் பயணங்கள் சம்பந்தமாக உத்தியோகபூர்வ பதிவறிக்கையைக் கண்டுபிடிக்க முடியாதிருப்பதாகவும், அதேநேரம் உயிரிழந்த வஸீம் தாஜுதீனின் தொலைபேசி மற்றும் கணினி ஊடாகவும் விசாரிக்கப்பட்டதாகவும், அவற்றின் ஊடாக முக்கியமான தரவுகளைக் கண்டறிய முடியவில்லை என்றும் அவர் கூறிவிட்டார். கொலை இடம்பெற்ற தினம், அலரி மாளிகையிலிருந்து வெளியேறிச் சென்ற நான்கு வாகனங்கள் தொடர்பில் சி.ஐ.டி தீவிர விசாரணைகளை மேற்கொண்ட போது தாஜுதீனின் கொலை இடம்பெற்ற தினம், குறிப்பிட்ட நேரத்தில் நாசாவின் செயற்கைக் கோளினால் பிடிக்கப்பட்ட படங்கள் மற்றும் காணொளிகளை தமக்குப் பெற்றுத் தருமாறு சி.ஐ.டி. கோரிய நிலையில், குறிப்பிட்ட நேரத்தில் குறித்த இடத்தில் எந்தவொரு செயற்தைக்கோளும் செயற்படவில்லை என்பதால் அவ்வாறான எந்தப் படங்களும் இல்லை என நாசாவினால் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னரே இப்படுகொலை குறித்த விசாரணைகளில் நம்பிக்கையூட்டும் வகையில் சி.ஐ.டியுடன் நீதிமன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க, நீதிமன்றுக்குத் தகவலொன்றைத் தெரிவித்திருந்தார். அவ்வேளை ஜனாதிபதியாக இருந்த முன்னாள் பிரதமர் மஹிந்தவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவின் ‘சிரிலிய சவிய’ எனும் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட டிபெண்டர் வண்டியில் வஸீம் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டதாக சி.ஐ.டிக்கு கிடைத்துள்ள மிக நம்பகரமான தகவலின் பின்னர் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது டப்ளியூ.பி.கே.ஏ. 0642 எனும் குறித்த டிபெண்டர் வண்டியில் உயிரியல் கூறுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிய அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டு சோதிக்கப்பட்டது.

அப்போது அதில் இன்றும் பரிசோதனைக்கேற்ற நிலையில் உயிரியல் கூறுகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலைமை நம்பிக்கையளிக்கக்கூடியதாக அமைந்தது. அந்த உயிரியல் கூறுகள் வஸீமினுடையதாக இருந்தால் இவ்வழக்கில் மிகப்பெரும் திருப்புமுனை ஏற்படும் என்று இருக்கையிலேயே இது பற்றிய உண்மை மர்மமாகியது. இதேவேளை, வஸீம் கொலைசெய்யப்பட்ட தினத்தில் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறிய நான்கு வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தியுள்ளோம் என்று கூறியபோது அறிக்கையில் ‘அலரி மாளிகை’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானித்த நீதிவான், ஜனாதிபதி மாளிகையெனக் குறிப்பிட்டது அலரி மாளிகையா என கேள்வி எழுப்பினார். அதற்கு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஆம் என்று கூறியதுடன், அப்போதைய ஜனாதிபதி அதிலேயே தங்கியிருந்ததாகக் கூறினார். நீதிவான் இசுரு நெத்திகுமார, அந்த இராணுவ வீரர்கள் எதற்காக அலரி மாளிகையில் இருந்தனர் எனக் கேட்டார். அதற்கு பிரபு பாதுகாப்பு அதிகாரிகளாக அவர்கள் செயற்பட்டார்கள் எனப் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பதிலளித்தவுடன், அந்தப் பிரபு யார் என மீண்டும் நீதிவான் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர் மஹிந்த ராஜபக்ஷ என பதிலளித்தார். இதன் பின்னர் கொலைசெய்யப்பட்ட தினத்தில் அதாவது 2012.05.16 ஆம் திகதிக்கும், மறுநாள் 17ஆம் திகதிக்கும் இடைப்பட்ட கால நேரத்தில், சம்பவம் இடம்பெற்ற பகுதியிலுள்ள தொலைபேசித் தொடர்பாடல் கோபுரத்திலிருந்து அனைத்து தகவல்களும் பெறப்பட்டு அதிலிருந்து சந்தேக நபரை அடையாளம் காணும் முயற்சியும் எடுக்கப்பட்டு அதுவும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில், தற்போதுள்ள மூன்று சந்தேக நபர்களுக்கும் எதிராக தண்டனை சட்டக் கோவையினர் 198, 215ஆம் அத்தியாயத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் தெளிவாக இருந்தன. பின்னர் தீவிரமாகச் சென்ற இந்த வழக்கு 2019 ஜூன் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் எதிர்பார்ப்புகளை நசுக்கியதோடு, கதிரையில் கள்வன் அமர்ந்ததும் இந்த வழக்கு மண்ணோடு மண்ணாக புதைந்து போனது.

**இன்று**

“அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்” என்ற பழமொழி இன்று உயிர் பெற்றுள்ளது. இந்த பூமியில் தாஜுதீன், லசந்த, தாரகி, நிமலராஜன், பிரகித், லலித், குகன் போன்றவர்கள் எத்தனை பேர் இவ்வுலகிலிருந்து மறைந்திருக்கிறார்கள். நான் முதலில் கூறியது போல காக்கைச் சிறகுக் கோட்பாட்டில் காணாமல் போனவர்கள் எத்தனை பேர்? எத்தனை உடைமைகள்? எவ்வளவு சேதங்கள் என்று பார்த்தோமானால் அவற்றை இலகுவாகக் கணக்கிட முடியாது. இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரப் பஞ்சத்தின் காரணமாகவே கோட்டாபய ராஜபக்ஷவிற்கு 2019 இல் வாக்களித்த 69 இலட்சம் மக்களும் எதிராக போராடி வருகின்றனர். இந்த நாட்டில் சிறுபான்மையினராக வாழ்கின்ற தமிழ், முஸ்லிம்கள் கடந்த காலங்களில் அனுபவித்த துன்பங்களை வார்த்தையாலும், எழுத்தினாலும் சுருக்கமாகக் கூறி விட முடியாது. இதற்கெல்லாம் மூல காரணியாக இருந்தோர் இந்த ராஜபக்ஷர்களே என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், அவர்களை ஆதரித்த பெரும்பான்மை மக்களும் அந்த நேரத்தில் மௌனிகளாகவே இருந்தனர். அளுத்கம கலவரம் தொடக்கம் தமிழ் இனப் படுகொலை, ஜனாஸா எரிப்பு இவற்றை இங்கு பிரதானமாக கூறலாம். ராஜபக்ஷர்கள் கடந்த காலங்களில் பற்ற வைத்த தீ எல்லாம் இன்று ஒன்று சேர்ந்து தீப்பாறையாக உருவாகியுள்ளது. மொட்டு தனக்குத் தானே வைத்த தீ என்று பலர் கூறினாலும், இந்தத் தீ அவர்கள் அழித்த அனைவரினதும் சாபத்தால் பரவியது என்று கூறுவது மிகப் பொருத்தமாக இருக்கும்.

தொடர்ந்து எட்டு வருடங்களாக மௌனமாக இருந்த வஸீமின் குடும்பத்தினர் 2019 ஆம் ஆண்டு கொலைக்கு நீதி வேண்டும் எனக் கூறியிருந்தனர்.

10ஆம் பக்கம் பார்க்க...

## இன்றைய நாளில்...

- 1805 – முஹம்மது அலி எகிப்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
- 1946 – இலங்கையின் புதிய சோல்பரி அரசியல் யாப்பை ஏற்றுக் கொள்ளும் அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.
- 1969 – சோவியத்தின் வெனேரா-6 விண்கலம் வெள்ளிக் கிரகத்தின் வளிமண்டலத்தினுள் சென்று அதனுடன் மோதுவதற்கு முன்னர் வளிமண்டலத் தரவுகளை பூமிக்கு அனுப்பியது.
- 1972 – இலங்கையில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் கூடி தமிழர் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கினர். இது பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆனது.
- 1990 – உலக சுகாதார அமைப்பின் பொதுச்சபை தற்பால்சேர்க்கையை உளநோய்களின் பட்டியலிலிருந்து நீக்கியது.
- 1998 – தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- 2004 – அமெரிக்காவில் முதலாவது சட்டபூர்வ ஒருபால் திருமணம் மாசச்சூசெட்ஸ் மாநிலத்தில் நடைபெற்றது.
- 2009 – தமிழினப் படுகொலை நாள். வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கை அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டனர். நான்காம் கட்ட ஈழப்போர் முடிவுக்கு வந்தது.

## நக்கல் நமசிவாயம்

''ஒரேயொரு எம்.பி அதுவும் தேசியப்பட்டிலில வந்த ஒருத்தருக்கு முழு பார்லிமென்ட் எம்.பிமாரும் சப்போர்ட் பண்ணுறாங்கள் என்றால் பாருங்கோவன் நிலமைய...''



# புளத்சிங்ஹல கிராமங்களில் பெருக்கெடுத்த வெள்ளம்: பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் இடம்பெயர்வு











(எஸ். பொத்தெனிய)

புளத்சிங்ஹல பகுதியில் பெய்துவரும் அடைமழை காரணமாக பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. புளத்சிங்ஹல, மோல்காவ, பரகொட, ஹூணுகெவத்த, ட்ரெபல்கார்ட் ஆகிய கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை, மில்லகந்த கிராமமும் வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்களை வெளியேறுமாறு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதாக புளத்சிங்ஹல பிரதேச செயலாளர் ரங்கண பிரசாத் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி மன்னாரை வந்தடைந்தது







(மன்னார் நகர் செய்தியாளர்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி பவனி நேற்று திங்கட்கிழமை (16) மன்னாரை வந்தடைந்தது.

மே மாதம் 12ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமானது. இதன்போது வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் குறித்த நினைவேந்தல் ஊர்தி சென்று முள்ளிவாய்க்கால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், முள்ளிவாய்க்கால் வாரத்தின் 5 ஆவது நாளான நேற்று திங்கட்கிழமை(16) குறித்த ஊர்தி மன்னாரை வந்தடைந்தது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் அஞ்சலி இடம்பெற்றது. தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி இடம்பெற்ற ஊர்தி பவனியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.



இதன்போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலந்து கொண்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.



"நாட்டைப் பற்றி சிந்திக்கும் அரசியல் இயக்கமொன்று அவசியமாகிறது. மக்கள் இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கியிருக்கும் இந்நிலையில், நாடாளுமன்றத்தில் 113 பெரும்பான்மையை நிரூபிப்பதை விடுத்து 22 மில்லியன் மக்களின் நலன் குறித்து அக்கறைகொள்ள வேண்டும்"

முன்னாள் அமைச்சர் டலஸ் அலகப்பெரும

## ஆளுங்கட்சி பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன நியமனம்



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆளுங்கட்சி பிரதம கொறாடாவுக்கான கடமைகளை அவர் நேற்று (16) பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடமைகளை ஏற்றுக்கொண்டதன் பின்னர் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாட்டில் இடம்பெற்ற கலவரங்களில் தமது வீடுகள் மற்றும் சொத்துகளை இழந்தோருக்கு இழப்பீடு பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஹரீஸ் எம்.பி. 20ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்த நோக்கத்தை கல்முனை மக்கள் அறிவர்

### இப்போதைய அவரின் தீர்மானம் சரியானதென்கிறார் மௌலவி அப்துல் மஜீத்

(நூருள் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் 20ஆம் திருத்தச் சட்டத்துக்கு ஆதரித்தது பதவிக்கு ஆசைப்பட்டல்ல என்பதை நாம் அறிவோம். கடந்த ஆட்சியில் முஸ்லிம் அமைச்சர்கள், ஆளுநர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என இனவாத நோக்குடன் ரத்னதேரர் உண்ணாவிரதம் இருந்தபோது அனைவரும் இராஜினாமா செய்து பின் அமைச்சர்கள் மீண்டும் பதவி பெற்றபோது எச்.எம்.எம். ஹரீஸ் மட்டும் அமைச்சு பதவியை நிராகரித்தார்.

அது போன்று நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ் 20ஆம் திருத்தத்துக்கு கை உயர்த்தியமைக்கான காரணம் கல்முனை பிரச்சினையாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி கலாபூஷணம் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயமானது, அரசினால் கொண்டுவரப்பட்ட 20ஆம் திருத்தச் சட்டத்துக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் ஆதரவளித்ததன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கூட்டிலிருந்தும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்தும் ஓரங்கட்டப்பட்டார். மு. காவிலிருந்து அவர் வெளியேறியதாக அவர் ஏற்காதபோதும் வெளியேறினார் என்பதே நிதர்சனம்.

எச்.எம்.எம். ஹரீஸ் 20ஆம் திருத்தத்துக்கு கை உயர்த்தியமைக்கான ஒரே காரணம் கல்முனை பிரச்சினையாகும். இதனால் ஐக்கிய காங்கிரஸ் கட்சியினராகிய நாம் அவரை வாழ்த்தியிருந்தோம். கல்முனை முஸ்லிம்களில் 90 வீதமானோர் எச்.எம்.எம். ஹரீஸின் இந்த செயலை உள்ளார்ந்த ரீதியாக பாராட்டினர் என்பதே உண்மை.

பின்னர், பொதுஜன அரசின் மோசமான ஆட்சி காரணமாக 20ஐ ஆதரித்தோரும் செய்வதறியாது



விழித்தனர். இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்திய மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் எச்.எம்.எம். ஹரீஸுக்கெதிராக கிழக்கில் அணி சேர்த்தார். தற்போது பொதுஜன பெரமுன அரசு ஒழிந்து ரணில் அரசு ஏற்பட்டுள்ள நிலையில் ரவூப் ஹக்கீம் எந்தப் பக்கம் இருக்கிறாரோ அதே சஜித் பக்கம் ஹரீஸ் சென்றது மிகச்சரியான தீர்மானமாகும்.

ஆனாலும், ரணில் ஆட்சியில் கல்முனை பிரச்சினை தீருமா அல்லது இன்னும் கொதிப்படையுமா என்பதெல்லாம் அடுத்து வரும் சோடாப்போத்தல் அரசியலாகும் என்று தெரிவித்துள்ளார்.

## குக்குலே கங்க நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகள் திறப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான மற்றும் அண்மித்த பிரதேசங்களில் பெய்து வரும் மழை காரணமாக கிளை ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து குக்குலே கங்க ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு இதன் இரு வான் கதவுகள் திறக்கப்பட்டதாக இந்நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர்கள் நேற்று தெரிவித்தனர்.

இதனால் களுத்துறை மாவட்டத்தின் பல பிரதேசத்தில் பல வீதிகள் நீரில் மூழ்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் இந்நிலைமை தற்போது சீரடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதேச காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மஸ்கெலியாவில் நடமாடும் சேவை

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக்கின் வேண்டுகோளுக்கு இணங்க பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்க நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

மஸ்கெலியாவில் உள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் நடமாடும் சேவை அவசியம் என பிரதேச சபையில் அவரால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கமைய இந்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில், இம்மாதமும் ஜூன் மாதத்திலும் மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து கிராமசேவகர் பிரிவுகளிலும் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதாக அம்பகமுவ பிரதேச செயலகம் கடிதம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நடமாடும் சேவையினை மஸ்கெலியா பிரதேச சபை மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்தவுள்ளன.

## இரத்தினபுரி மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக இம்மாவட்டத்தில் பரந்தளவில் மண்சரிவு ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, குருவிட, எஹலியகொடை, கலவான, எலபாத்த, பெல்மதுளை, எஹலியகொடை, கஹவத்த, நிவித்திகலை, இம்புல்பே, கொடக்கவெல, பலாங்கொடை, கிரியெல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் அறிவுறுத்தல்களுக்கிணங்க ஒவ்வொரு பிரதேச செயலக இடர் முகாமைத்துவ மற்றும் கிராம சேவை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் விசேடமாக ஏற்கனவே மண்சரிவு அவதான இடங்களாக அவதானத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள இப்பகுதியை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கலவான, பெல்மதுளை, இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு சிவப்பு அடையாள எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்களும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்ஹல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆமர்வீதி குடியிருப்பில் நபரொருவர் குத்திக்கொலை

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆமர் வீதி அடுக்குமாடி குடியிருப்பு தொடரொன்றுக்கு அருகில் நபரொருவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் ஆமர் வீதி அடுக்குமாடி குடியிருப்பில் வசித்த 42 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக நடவடிக்கைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான தீர்வு எப்போது?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



காலிமுகத்திடலில் அமைதி வழியில் போராடிக்கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர் கூட்டத்திற்கு எதிராக போராட்டக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதல் தொடர்பான மதிப்பீடுகளையும் நிவாரணங்களையும் அரசாங்கம் உடனடியாக அறிவித்துள்ள நிலையில், இதுவரையான காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு உரிய மதிப்பீடுகளோ, விசாரணைகளோ, நிவாரணங்களோ வழங்கப்பட்டதா? - என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதனைத் தமிழர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிர்வினையாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் நூற்றுக்கணக்கான கோடி ரூபா சொத்துகளை அழித்ததுடன் தமிழர்களையும் கொன்று குவித்தது. ஆனால், இன்றுவரை இது தொடர்பான விசாரணைகளும் நடைபெறவில்லை, நிவாரணமும் கிடைக்கவில்லை.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன தமிழ் மக்கள் மீது வன்முறையை ஏவிவிட்டார். இதன்போதும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா சொத்துகள் அழிக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான தென்பகுதிவாழ் தமிழர்கள் தமது தாயகமான வடக்கு, கிழக்கிற்கு விரட்டியடிக்கப்பட்டனர். இதுதொடர்பான விசாரணைகளும் நடைபெறவில்லை, நிவாரணமும் கிடைக்கவில்லை.

மீண்டும் 1983ஆம் ஆண்டும் தமிழர்கள்மீது அரச அனுசரணையுடன் பாரிய ஒரு வன்முறைத் தாக்குதல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், திட்டமிட்ட வகையில் அவர்களது வீடுகளும், வியாபார நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டு தீயூட்டப்பட்டன. இந்த வன்முறைகளிலிருந்து தமிழர்கள் தம்மைத் தற்காத்துக்கொள்ள தனிநாடுகோரி இலங்கைப் படையினருக்கு எதிராக நீண்ட ஆயுதப் போராட்டத்தை நடத்தினர். அன்றைய காலகட்டங்களில் வடக்கு, கிழக்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டு, அவர்களின் குடும்பங்கள் ஏதுமற்றவர்களாக, எஞ்சியவர்களின் உயிரைக் கையில் பிடித்தபடி நிர்க்கதியாகி நடுத்தெருவுக்கு வந்தனர்.

இறுதியில், 2009இல் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன், முள்ளிவாய்க்காலில் விவசாயிகளின் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்கள், கனரக வாகனங்கள், இயந்திரங்கள், மகிழுந்துகள், உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பன கைவிடப்பட்டு மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் மீண்டு வந்தபொழுது அவர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உடைமைகள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் பின்னர் வங்கிகளில் வைப்பிலடப்பட்டிருந்த பல்லாயிரம் கோடி பெறுமதியான தங்கமும், வைப்பிலிடப்பட்டிருந்த பல்லாயிரம் கோடி பணமும் அரசாங்கத்தினால் கபளீகரம் செய்யப்பட்டது. இவை தொடர்பாக அன்றிலிருந்து இன்றுவரை எந்தவிதமான விசாரணைகளோ நிவாரணங்களோ எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அரசாங்கத்தின் தமிழ் மக்கள் விரோத தவறான அணுகுமுறை மற்றும் பொருளாதாரக் கொள்கை காரணமாக நாடு பொருளாதார ரீதியில் கடுமையான வீழ்ச்சியை சந்தித்திருக்கிறது.

பொருளாதார வீழ்ச்சியினால் கொதித்தெழுந்த தென்பகுதி சிங்கள மக்கள், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை பதவி விலகுமாறு கோரி கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் கோட்டா கோ கம, மஹிந்த கோ கம என்னும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்த பாரிய கிளர்ச்சியை அடக்குவதற்காக, அரசாங்கம் தமது கட்சிக் குண்டர்களை அமைதியாகப் போராடிக்கொண்டிருந்தவர்கள் மீது ஏவிவிட்டு வன்முறையைத் தூண்டியது. இதன் காரணமாக ஏற்பட்ட கலவரத்தில் ஆளும் கட்சியினரின் பல வீடுகள் எரியூட்டப்பட்டதுடன், அவர்களது அலுவலங்களும் வாகனங்களும் தீயிடப்பட்டன. ஆளுந்தரப்பு அமைச்சர்களின் வீடுகளிலிருந்து சட்டவிரோதமாக பதுக்கிவைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான எரிவாயு கொள்கலன்களும், பெற்றோல், டீசல் பெரல்களும், நூற்றுக்கணக்கான நெல் மூடைகளும், உர மூடைகளும், குண்டர் கூட்டத்திற்காக வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்களும் பொதுமக்களால் மீட்கப்பட்டன.

அது மாத்திரமல்லாமல், மக்களின் போராட்டத்தைக் குழப்புவதற்காக குண்டர் கூட்டத்தை அழைத்துவந்த 48 பஸ்கள் பொதுமக்களால் அடித்து நொறுக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்த கலவரத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்காக அரசாங்கத்தின் பல்வேறுபட்ட புலனாய்வுப் பிரிவுகளும் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல், பொதுமக்களிடமிருந்தும் இது தொடர்பான தகவல்களைத் தருமாறு கோரிவருகின்றனர்.

ஒரு நாள் நடைபெற்ற இந்தக் கலவரத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்து அழிக்கப்பட்டதாக அரசாங்கம் ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறது. இதில் சொத்துகளை இழந்த பலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் என்ற வகையிலும் மேலும் பெரும்பான்மை சிங்கள தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற வகையிலும் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் துரிதகதியிலான ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்திருக்கிறது.

மேற்கண்டவற்றிலிருந்து இலங்கை அரசாங்கம் சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நலன்களில் காட்டுகின்ற அக்கறையை தமிழ் மக்கள் மீது காட்டுவதில்லை என்பதும், இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும், நாடு இன்று எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் தமிழர்விரோத செயற்பாடே காரணம் என்று தெரிந்த பின்னரும், இலங்கை அரசாங்கம் இன்னமும் தமிழர் விரோத செயற்பாட்டையே உயர்த்திப் பிடிக்கின்றது என்பதும் தமிழ்த் தேசிய இனத்தை தனது கால்களின்கீழ் அடிமைகளாக வைத்திருப்பதையே விரும்புகிறது என்பதும் தெளிவாகின்றது.

இந்த நாடு ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்பதையும், பல மொழி, பல கலாசாரங்களையும் பண்பாடுகளையும் பின்பற்றுகின்ற மக்கள் இங்கு வாழ்கின்றனர் என்பதையும், அவர்களது உரிமைகள் மதிக்கப்பட்டு அனைவருக்கும் சமநீதி வழங்கப்படவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்ளாதவரை இந்த நாட்டில் பொருளாதார எழுச்சியும் வராது. இந்த நாட்டிற்கு விமோசனமும் ஏற்படாது என்று குறிப்பிட்டுள்ளார்.

# அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை அறுபதாக்க வேண்டும்

## அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை

(துறைநீலாவணை நிருபர்)

அரச திணைக்களங்களிலிருந்து ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களின் வயது எல்லையை முன்னரைபோன்று அறுபதாக மாற்றுவதற்கு இலங்கையின் ஆறாவது தடவையாக வரலாற்றில் பதிவாகியுள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கமானது நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென ஒன்றிணைந்த அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமைச்சரவை அங்கீகாரத்துடன் வயதெல்லை அறுபத்தைந்தாக மாற்றியமைக்கப்பட்டிருந்தாலும் தற்போது புதிதாக அமையவுள்ள அமைச்சரவையில் இதனை அறுபதாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

குறித்த அமைச்சரவைத் தீர்மானமானது நிர்வாக ரீதியில் அரச துறையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஓரளவு சாதகமாக அமைகின்றபோதிலும் கல்வியுடன் தொடர்புடைய பாடசாலையில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு பாதகமான நிலைமையினை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

அழகியல் துறைசார் பாட ஆசிரியர்களுக்கு குறிப்பாக சங்கீதம், நாடகமும் அரங்கியலும், நடனம் போன்ற துறைசார் ஆசிரியர்கள் அறுபத்தைந்து வயதில் நடிபாகத்தினை வகிப்பது (பரிசோதனை ரீதியான) செயற்பாடுகளை முன்னெடுப்பது இயலாத விடயமாகக் காணப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

ஓய்வு பெறும் வயதெல்லையை அறுபதாக மட்டுப்படுத்தப்படுகின்றபோது பட்டத்தை பூர்த்திசெய்த இளைஞர் யுவதிகளுக்கு துரித வேலைவாய்ப்பினை வழங்குவதற்கான சூழல் உருவாகும். அரச துறைகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் உடல் நலனைக் கருத்திற்கொண்டு ஓய்வுபெறும் வயதெல்லையினை அறுபதாக மாற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபரொருவர் கைது

வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் திருட்டுச் சம்பவங்களை மேற்கொண்டு, பின்னர் தலைமறைவாகியிருந்த நைஜல் ஜகோடின் எனப்படும் நைஜல் கௌஸ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட தொடர் விசாரணைகளையடுத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் வெல்லம்பிட்டியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து கைக்குண்டு, கத்தி மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் கொழும்பிலுள்ள சில முன்னணி வர்த்தக நிலையங்களிலும், எங்கிலிக்கன் பாதிரியார் ஒருவரின் வீட்டிலும் திருடியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



திருட்டுச் சம்பவங்களின்போது, பெண்ணொருவரை மிரட்டி அவரை தாக்கிய குற்றச்சாட்டும் சந்தேகநபர் மீது பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவரை கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையிலேயே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தம்புத்தேகமவில் விற்பனைக்கு உதவாத 5,000 கிலோ வாழைக்குலைகள் அழிப்பு

தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டுவரப்பட்ட 25 ஆயிரம் வாழைக்குலைகள் அழிக்கப்பட்டுள்ளதாக தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் சுனில் செனவிரத்ன நேற்று (16) தெரிவித்துள்ளார்.

இந்த வாழை தொகை ஏப்பாவல, கட்டியாவ, கல்னேவ, புல்னேவ மற்றும் நொச்சியாகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளினால் வெசாக் போயா தினத்துக்கு முன்னர் விற்பனை செய்வதற்காக தம்புத்தேகம பொருளாதார மத்தியநிலையத்துக்கு கொண்டுவப்பட்டுள்ளது.

நுகர்வோர் வருகை தராமையினால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வாழை உள்ளிட்ட பழங்களை கொள்வனவு செய்வதற்காக கண்டி, கம்பஹா, கொழும்பு ஆகிய தூர பிரதேங்களிலிருந்தே நுகர்வோர் வருகை தருகின்றனர். இருந்தபோதிலும், தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலைமையின காரணமாக தம்புத்தேகம போன்ற தூர பிரதேசங்களுக்கு வருகை தருவதில்லை. அவர்களின் லொறிகளுக்கு டீசலை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக விவசாயிகளினால் கொண்டுவரப்பட்ட 25 ஆயிரம் கிலோ வாழைக்குலைகளின் ஒருபகுதியை யானைகளுக்கு பெற்றுக்கொடுக்க எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. மஞ்சிய வாழைகளை குப்பையில் வீச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதமரின் நியமனம் சட்டத்துக்கு முரணானது என்பவர்கள் அரசியலமைப்பை வாசிக்கவில்லை

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன குற்றச்சாட்டு



பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நியமனம் அரசியலமைப்புக்கு முரணானது என தெரிவிப்பது, மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையிலான கருத்துகள் - என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளர்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையில் கருத்துகளை பரப்புபவர்கள், உடனடியாக அரசியலமைப்பின் 37ஆவது உறுப்புரையை வாசிக்க வேண்டும். அந்த உறுப்புரையில் பிரதமர் நியமனம் தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாடு நெருக்கடி நிலையை சந்தித்துள்ள தற்போதைய சந்தர்ப்பத்தில் மேலும் மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையிலான கருத்துளை வெளியிடாதவர்கள் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்புகளை புதிய பிரதமருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

# புகையிரதம் தடம் புரள்வு

புகையிரதம் வீதியிலிருந்து விலகியமையினால் பிரதான வீதியின் புகையிரத போக்குவரத்து நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன.

ரம்புக்கனை மற்றும் கடிகமுவ புகையிரத நிலையங்களுக்கிடையிலேயே குறித்த புகையிரதம் நேற்று (16) இவ்வாறு தடம்புரண்டுள்ளது.

கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த இலக்கம் 36 கொண்ட புகையிரதமே இவ்வாறு தடம்புரண்டுள்ளது.

அதற்கமைய, உடரட்ட புகையிரத போக்குவரத்தில் ஈடுபடும் சகல புகையிரதங்களும் தற்போது ரம்புக்கனை புகையிரத நிலையத்தில் நேற்று தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# டேவிட் மெக்கினன் - சஜித் சந்திப்பு



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் நேற்று முன்தினம் (15) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்தார்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நிலைமை மற்றும் இதிலிருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவது குறித்த விடயங்கள் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.







கொழும்புத்துறை, இலைந்தைக்குளம் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா கடந்த 14ஆம் திகதி பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# முள்ளிவாய்க்கால் ஊர்தி பவனி யாழிலிருந்து ஆரம்பம்






(யாழ். நிருபர்)

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஊர்தி பவனியொன்று நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில் இந்த ஊர்தி பவனி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது. "தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டு இனப்படுகொலை நினைவுத்தூபி வைக்கப்பட்டுள்ள நிலையில், வீதிகளில் பயணித்த பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் இந்த ஊர்தி பவனி பயணித்தது.

இந்த ஊர்தி பவனியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

# குமுதினி படுகொலையின் 37ஆவது நினைவேந்தல் யாழ். பல்கலையில்






(யாழ். நிருபர்)

குமுதினி படுகொலையின் 37ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு முன்றலில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஆத்மார்த்தமான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையே பயணம் செய்த 64 பயணிகளை உள்ளடக்கிய குமுதினிப் படகு வழிமறிக்கப்பட்டு கடற்படையினரால் குறித்த படகில் பயணித்த சிறுபிள்ளை முதல் 36 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதனை நினைவுகூரும் முகமாக யாழ். பல்கலைக்கழகத்தில் பல்கலைக் கழகமாணவர்களால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மேலும், படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு உரிய நீதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை. அவர்களுக்குரிய நீதி கிடைக்க வேண்டும் என யாழ். பல்கலை மாணவர்களால் வலியுறுத்தப்பட்டது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி 5ஆவது நாள்




**இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் நிலையில், நேற்று திங்கட்கிழமை வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வைத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.**

# ஜெயசுதனின் 'அவதாரம்' சிறுகதை நூல் வெளியீடு







(யாழ். நிருபர்)

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே. உமாசுதன் எழுதிய 'அவதாரம்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் கலையரங்கில் மருத்துவர் வை.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். நூலாசிரியரின் பெற்றோர் நூலைப் பெற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் இ. செந்தில்மாறன், சமுதாய மருத்துவ நிபுணர் எஸ். சிவகணேஸ் ஆகியோர் சிறப்புரைகளையும், ஓய்வுபெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் வெளியீட்டுரையும், என். விஜயசுந்தரம் நயப்புரையையும் ஆற்றினர்.

நூலாசிரியர் ஜே. உமாசுதன், ஜெயசுதன் எனும் பெயரில் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் சிறுகதைகள், கவிதைகளை எழுதி வருபவர். அண்மையில் இவரது கவிதைகளின் தொகுப்பு நூல் ஒன்றும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# கருணா நிலையத்தில் தையல் பயிற்சிநெறியை நிறைவுசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிவைப்பு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி கருணா நிலையத்தில் தையல் பயிற்சியை நிறைவுசெய்த 11ஆவது அணியினருக்கு நேற்று சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

ஆறு மாத இலவச தையல் பயிற்சியை நிறைவுசெய்த 11ஆவது அணி மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, அவர்களால் வடிவமைக்கப்பட்ட ஆடைகளும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சியில் கல்விப் பணி, சமயப் பணி உள்ளிட்ட பல்வேறு சமூகப் பணிகளையும் கருணா நிலையம் ஆற்றிவருகின்றது.

அந்த வகையில் தொழிற் பயிற்சியாக தையல் பயிற்சியினையும் வயது வேறுபாடின்றி அனைவருக்கும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தியகலை – நோட்டன் வீதி போக்குவரத்துத் தடை வழமைக்கு




(கினிகத்தேனை நிருபர்)

தியகலைக்கும் நோட்டன் வீதிக்கும் இடையில் டெப்லோ என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் 15ஆம் திகதி பாரிய கல் ஒன்று வீதியின் குறுக்கே விழுந்ததால் ஏற்பட்டிருந்த போக்குவரத்து தடை நேற்றுமுதல் வழமைக்கு திரும்பியுள்ளது.

தற்போது மலையகத்தில் சீரற்ற காலநிலை நிலவுவதோடு பலத்த மழையும் பெய்து வருவதால் குறித்த இடத்தில் நேற்றுமுன்தினம் பாரிய கல் ஒன்று வீதியின் குறுக்கே விழுந்ததால் அப்பகுதிக்கான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. அதேவேளை, வீதியின் குறுக்கே பாரிய குழி ஒன்று ஏற்பட்டிருந்ததாலே கனரக வாகனங்களும் ஏனைய சிறிய வாகனங்களும் செல்லமுடியாதிருந்தது.

இருப்பினும், பாரிய குழி விழுந்த குறித்த பாதையை வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் மண் மற்றும் கற்களைக் கொண்டு நிரப்பி தற்காலிகமாக சீர்செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதியில் விழுந்த குறித்த கல்லினால் மின்சாரக் கம்பங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதால் அவையும் விரைவில் சீர் செய்யப்பட வேண்டும் என அப்பகுதிவாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## நீர்நிலைகளுக்கு செல்ல எச்சரிக்கை

(உக்குவளை நிருபர்)

தற்போது நாட்டில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக மாத்தளை பிரதேச நீரேந்துப் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில், அப்பகுதிகளிலுள்ள நீர்நிலைகளுக்கு நீராடச்செல்வதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், சில குறிப்பிட்ட இடங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கைரும் விடுக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் அனர்த்த நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், அதுகுறித்த அனுமானங்கள் ஏதும் தெரிந்தால் உடனடியாக இருப்பிடத்தை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் அறிவித்துள்ளது.

# மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திசெலவு அதிகரிப்பு: மாத்தளை சவப்பெட்டி உற்பத்தியாளர்கள் தமது தொழிலை கைவிடும் அபாய நிலை

(மாத்தளை நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து பொருட்களுக்கான உற்பத்திசெலவுகளும் அதிகரித்துள்ளன. இதனால் சவப்பெட்டி உரிமையாளர்களும் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சவப்பெட்டி மூலப்பொருட்களின் உற்பத்திசெலவு அதிகரித்துள்ளதால், தொழிலை தொடர்ந்தும் முன்னெடுப்பது கேள்விக்குறியாக உள்ளது. இதனால், சவப்பெட்டியின் விலையை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று லொறிகளில் சவப்பெட்டிகளை வெளியூர்களுக்கு அனுப்பி வைப்போம். ஆனால், இப்போது இருக்கக்கூடிய உற்பத்தி செலவுகளுக்கு மத்தியில் இவ்வாறான நிலைமை சரிந்துபோன நிலையில் எமது தொழில் முயற்சிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது.

மெல்சிறிபுர, மடஹபொல, அலிபள்ளம, எல்கவயாய ஆகிய கிராம மக்கள் முற்றிலும் சவப்பெட்டி உற்பத்தி செய்வதிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இக்கிராமத்தில் மொத்தம் 25 குடும்பங்கள் இருக்கின்றன. இவர்களின் அடிப்படைத் தொழில் சவப்பெட்டி உற்பத்தி செய்வதைவிட வேறொன்றும் இல்லை.

இந்நிலையில், முன்னர் ஒரு சவப்பெட்டியை 4ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 5ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்வோம். ஆனால், இப்பொழுது ஒரு சவப்பெட்டியை 8ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இனிவரும் காலங்களில் இந்நிலை மாறி ஒரு சவப்பெட்டியின் விலை 10ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

தமது அவசர பணத்தேவைக்காக உற்பத்தி செய்யப்பட்ட சவப்பெட்டிகளை மலர்ச்சாலை உரிமையாளர்களுக்கு குறைந்த விலைக்கு வழங்கினாலும் சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் அவர்கள், ஒரு சவப்பெட்டியை 35ஆயிரம் ரூபா தொடக்கம் 50ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்கின்றனர்.

எனவே, சவப்பெட்டிகளை உற்பத்தி செய்யவேண்டிய தேவையான பலகைகளை கொள்வனவு செய்யவும் அதற்கான ஏனைய பொருட்களான வார்ணீஸ் போன்றவற்றை கொள்வனவு செய்யும்போதும் அதிக பணத்தை செலவழிக்க ஏற்படுவதால் தொடர்ந்தும் இத்தொழிலில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ள தாங்கள் முடிவுகளை மேற்கொள்ளும் இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றோம்.

உற்பத்திக்கான நிதி உதவிகளை வழங்கும்படி அரசிடமும் அரச மற்றும் வங்கிகளிடமும் கோரிக்கைகளை முன்வைத்தபோதிலும் இதுவரை அவை சாத்தியப்படாததால் முற்றிலும் இத்தொழிலை கைவிடவேண்டிய சூழ்நிலை ஏற்படுமோவென அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ஹட்டனில் வெசாக்கூடு விற்பனையில் வீழ்ச்சி



வெசாக் பூரணைத்தினத்தன்று வெசாக் கூடுகள் மற்றும் வெசாக் தோரணைகள் களை கட்டுவது வழமை. ஆனால், இம்முறை ஹட்டனில் வெசாக் கூடுகள் விற்பனை மிகவும் குறைவடைந்துள்ளதாக வெசாக் கூடு விற்பனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த இருவருடங்களாக கொவிட் தொற்று நிலை காணப்பட்டாலும் வெசாக்கூடு அலங்காரங்களுக்கு பாரிய கேள்வி நிலவிய நிலையில், இந்த வருடம் வெசாக் கூடு அமைப்பதற்கான மூலப் பொருட்கள், வண்ணக் கடதாசிகள், மெழுகு வர்த்திகள் என அனைத்தினதும் விலை அதிகரிப்பு காரணமாக தமது வியாபார நடவடிக்கைகள் மோசமடைந்துள்ளன.

இதற்கமைய, சாதாரணமாக வெசாக் கூடு ஒன்றின் விலை 250 ரூபா தொடக்கம் 350 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதால் நுகர்வோர்கள் வெசாக்கூடுகளை வாங்க முன்வரவில்லை. இவ்வாறு நாட்டில் மூலப்பொருட்களுக்கான விலை அதிகரித்தால் சிறுவியாபாரிகளான நாம் வாழ்வாதாரத்தை எவ்வாறு கொண்டு செல்வது என கேள்வியெழுப்புகின்றனர்.

# கனமழையால் மாவுசாகலை நீர்த்தேக்க மட்டம் உயர்வு: தேங்கியுள்ள குப்பைகளை அகற்றவும் கோரிக்கை




(செ.தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் மாவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளது.

95 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த நீர்த்தேக்கம் நேற்று காலை 100 அடிவரை நீர்நிறைந்து காணப்பட்டது.

தொடர் மழை பெய்தால் இன்னும் ஓரிரு தினங்களில் இந்த நீர்த்தேக்கம் மேலும் நிரம்ப வாய்ப்புகள் உள்ளதாக நீர்நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், அப்பகுதிகளிலுள்ள கழிவுகள் அனைத்தும் மழைநீரில் அடித்துச்செல்லப்பட்டு நீர்த்தேக்கத்தில் குவிந்துள்ளது. இவை உக்காத பொருட்களாக காணப்படுகின்றன.

சாமிமலை ஓயா, நல்லதண்ணி ஓயா, மறே ஓயா, காட்மோர் ஓயா மற்றும் சிற்றாறுகளில் கொட்டப்படும் கழிவுகள் அனைத்தும் குறித்த நீர்த்தேக்கத்திலேயே குவிந்துள்ளன.

இதனால் விரைவில் அதனை அகற்ற பொறுப்பு வாய்ந்தவர்கள் முன்வர வேண்டும். அவ்வாறில்லாதபட்சத்தில், கால்நடைகள் அதனை உட்கொண்டு அவை இறக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படும் என குறித்த நீர்நிலைய அதிகாரி தெரிவித்தார்.



**மாத்தளை நகரில் வெசாக் பூரணைத் தினத்தன்று பெற்றோல், டீசல் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.**

# கல்லடி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் நாளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

(வெல்லாவெளி நிருபர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பில் வழமைபோல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நாளை (18) மு.ப, 9 மணிக்கு மட்டக்களப்பு - கல்லடி பிரதான வீதியிலுள்ள ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இடம்பெறும் - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இவ்வாலயத்தில் முள்ளிவாய்க்காலில் படுகொலைசெய்யப்பட்ட உறவுகளுக்கு விளக்கேற்றல், அகவணக்கம், விசேட பூசை வழிபாடுகள், கஞ்சி வழங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முள்ளிவாய்க்காலில் கடந்த 13 வருடங்களுக்கு முன்பு இனப்படுகொலை செய்யப்பட்ட எமது உடன் பிறப்புகளை நினைவுகூர்வது எமது உரிமையாகுமென தெரிவித்தார்.




கடந்த 2019ஆம் ஆண்டு முதலாவது முள்ளிவாய்க்கால் நினைவு நாளை பல அச்சுறுத்தல் மத்தியில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலும் நடத்தினோம்.

2010 தொடக்கம் தொடர்ந்து மட்டக்களப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை எதுவும் இல்லை. போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த உறவுகளுக்கு முழு உரிமையுண்டு. அதனை யாரும் தடுக்கமுடியாது என தற்போதைய புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்த நிலையில், வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்படுகின்றது.

# பொருட்களை பதுக்கி அதிக விலைக்கு விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜெகதீஸன் எச்சரிக்கை

(நிந்தவூர் நிருபர்)

தற்போதைய நாட்டு நிலைமையில் பொருட்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு அதனை விற்பனை செய்வதனை தவிர்க்க வேண்டுமென அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் தெரிவித்தார்.

இக்கட்டான காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் பொறுப்புடன் செயற்பட்டு பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களை விநியோகிக்க வேண்டும். சில பிரதேசங்களில் வர்த்தகர்கள் பொருட்களை பதுக்கி அதிக விலைக்கு விற்பனைசெய்து வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபையின் புலனாய்வு அதிகாரிகள் சுற்றிவளைப்பு பரிசோதனைகளை தற்போது நடத்தி வருகின்றனர்.

அசாதாரண சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி சில வர்த்தகர்கள் சந்தையில் பொருட்களுக்கு தற்காலிக தட்டுப்பாட்டினை ஏற்படுத்தி, அத்தியாவசியமான பொருட்களை பதுக்கி வைத்தல், பொருட்களை தம்வசம் வைத்துக்கொண்டு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து நுகர்வோரை திருப்பி அனுப்புதல், கூடுதலான விலைக்கு விற்பனை செய்தல் போன்றவை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், குறித்த வர்த்தக நிலையத்தை மூடுவதற்கான ஏற்பாடும் செய்யப்படும்.

எனவே, இக்காலகட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் முன்வரவேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

# கல்முனை சுகாதார சேவை பிரிவில் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு நான்காவது கொவிட்-19 தடுப்பூசி

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொவிட்-19 மூன்றாவது தடுப்பூசி பெற்ற 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நான்காவது பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தொற்று வேகமாக பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதால் உடனடியாக நான்காவது பைஸர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஏற்கனவே 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது, இரண்டாவது தடுப்பூசியாக சினோபார்ம் ஏற்றப்பட்டுள்ளது. மூன்றாவது, நான்காவதாக பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ள தடுப்பூசி வழங்கும் இடங்களுக்குச் சென்று தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் இத்தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு கொவிட்-9 இரண்டாவது பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சகல பாடசாலைகளிலும் 12 தொடக்கம் 15 வரையிலான வயதுடைய முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, ஏற்கனவே 16 முதல் 19 வரையிலான வயதிற்குட்பட்ட மாணவர்களில் முதலாவது, இரண்டாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும் தமக்குரிய தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் வெளிநாடு செல்பவர்கள் கொவிட்-19 பைஸர் தடுப்பூசிகளை கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும், பொது சுகாதார பரிசோதகர்களை தொடர்புகொண்டு தமக்கான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

# மட்டு. சிவானந்தா தேசிய பாடசாலையில் இரத்ததானம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் இரத்ததான நிகழ்வொன்று சிவானந்தா தேசிய பாடசாலையில் பிரதான ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்பொழுது நிலவிவரும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக இந்த இரத்ததான நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இரத்ததான நிகழ்வில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதுடன், இதில் குறிப்பாக மட்டக்களப்பு இராணுவத்தினரும் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இரத்ததான நிகழ்வில் சிவானந்தா விளையாட்டு கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பொலிஸ் நிலையத்தில் வெசாக் தின விசேட நிகழ்வுகள்





(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்திருந்த வெசாக் தின தன்சல விசேட சிறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் (15) பொலிஸ் நிலையத்தின் முன்பாக நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை ஸ்ரீ சுபத்திராம விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்தின தேரர் வெசாக் தின நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன், வீதி வழியாக சென்றுகொண்டிருந்த பொதுமக்களுக்கு பொலிஸாரின் ஏற்பாட்டில் தன்சல குளிர்பானம் மற்றும் உணவுப் பண்டங்களும் வழங்கப் பட்டன. பொலிஸ் நிலையத்தின் பெண் மற்றும் ஆண் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து சிங்கள பக்திப் பாடல்களை பாடினர்.

அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை.செனவிரட்ன பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில், கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட வசதி குறைந்த மூவின மக்களையும் சார்ந்தவர்களுக்கு விசேட அன்பளிப்பு பொதிகள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.வாஹிட் உட்பட நிந்தவூர், காரைதீவு, சவளக்கடை, பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்கள், கல்முனை பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட், பொலிஸ் நிலைய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். கல்முனை பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மூவின மக்களும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பொத்துவில் வைத்தியசாலையில் வெசாக் தின விசேட நிகழ்வுகள்



(பொத்துவில் நிருபர்)

வெசாக் பண்டிகையையொட்டி அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களும் நேற்று முன்தினம் (15) வெசாக் கூடுகளினால் அலங்கரிக்கப்பட்டு, மத வழிபாடுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றது.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையிலும் வெசாக் தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன. வைத்தியசாலை வளாகம் வெசாக் கூடுகளினால் அலங்கரிக்கப்பட்டு பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வைத்தியசாலையிலுள்ள நோயாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு (தன்சல்) பகல் போசனம் வழங்கப்பட்டதுடன், அன்றைய தினம் இரவு பக்திப்பாடல் மற்றும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து சகலருக்கும் உணவு மற்றும் பானம் என்பன வழங்கப்பட்டது.

குறித்த போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பொத்துவில் ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினால் பரிசில்களும் வழங்கப்பட்டன. வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப், நலன்புரிச் சங்கத்தின் தலைவர் டொக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன், செயலாளர் டொக்டர் எஸ்.எச்.யஸீர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு குறித்த பரிசில்களை வழங்கினர்.



# அம்பாறை தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் நிறைவேற்று உயர் சபை பிரதிநிதிகளின் விசேட கூட்டம்





(மருதமுனை மேலதிக, நற்பிட்டிமுனை நிருபர்கள்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பதிவுசெய்யப்பட்ட அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் நிறைவேற்று உயர் சபை செயற்பாட்டாளர்களுக்கான விசேட கூட்டம் பேரவையின் கௌரவ தலைவர் தேசபந்து ஜெலீல் ஜீ தலைமையில் நேற்று முன்தினம் (15) காலை 10 மணியளவில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் உயர்பீட நிர்வாகிகளின் தீர்மானத்திற்கிணங்க "அட்சயம்" கவிதைத் தொகுதி வெளியீடு, சிரேஷ்ட கவிஞர்களின் கவிதை வாசித்தல் "பாராட்டுப் பத்திரம் வழங்கல்" அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பெண் ஆளுமைகளுக்கு "மங்கையர் திலகம் விருதுகள்" வழங்கி கௌரவித்தல் ஆகிய முப்பெரு விழா ஜூன் மாதம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பல மேடை நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக காலை 8.30 மணிமுதல் மதியம் 2.00 மணிவரை சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் இம்முப்பெரு விழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பேரவையின் உயர்பீட நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இணைப்பாளர்கள் அடங்கலாக நிதியீட்டல் குழு, வெளியீட்டுக் குழு, ஊடக பிரசாரக் குழு, சேமநலன்புரிக் குழு மற்றும் கலை கலாசாரக் குழு என ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு புகைப்படங்கள் மற்றும் பேரவையின் நிறைவேற்று உயர் சபையின் உறுப்பினர்கள் அடங்கலாக புகைப்படங்கள் எடுக்கப்பட்டு பொறுப்புகள் வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு முப்பெரும் விழாவுக்குரிய ஒத்திகைகளும் பார்க்கப்பட்டன.

பேரவையின் செயலாளர் விபுலாமாமணி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, பொருளாளர் வித்தகர் செஸிலியா, கல்வியியலாளர்கள் மற்றும் கலைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டு ஆலோசனைகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்கினார்கள்.

# பெரிய புல்லுமலை புனித செபமாலை அன்னை திருத்தல வைகாசித் திருவிழா





(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுசுங சிறப்புமிகு கிறிஸ்தவ ஆலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு பெரிய புல்லுமலை புதுமைமிகு புனித செபமாலை அன்னை திருத்தல வைகாசித் திருவிழா நேற்று முன்தினம் (15) கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது.

அன்னையின் திருத்தல வைகாசித் திருவிழாவானது கடந்த 06ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி பேதுரு ஜீவராஜ் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நவநாட் திருவிழா வழிபாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கடந்த 13.05.2022 திகதி காலை 6.30 மணிக்கு கித்துள் புனித மார்டின் தெ போரஸ் ஆலயத்திலிருந்து பெரிய புல்லுமலை தூய செபமாலை அன்னை திருத்தலம் நோக்கிய பாதயாத்திரை ஆரம்பமாகியதுடன், மறுநாள் 14.05.2022 திகதி அன்னையின் திருச்சொருபத்தை தாங்கிய ரதம் திருத்தலத்தை வந்தடைந்ததும் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் திருவிழா கூட்டுத் திருப்பலி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதை தொடர்ந்து கொடியிறக்கத்துடன் ஆலய திருவிழா இனிதே நிறைவுபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திருவிழா திருப்பலியில் கலந்துகொண்டதுடன், அன்னையின் ஆசியையும் பெற்றுக்கொண்டனர். திருவிழாவில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை விளக்கமறியல் சிறையிலிருந்து 7 கைதிகள் விடுதலை

(கந்தளாய் நிருபர்)

வெசாக் தினத்தினை முன்னிட்டு திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து 07 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் தினத்தையொட்டி நேற்று முன்தினம் (15) நாடளாவிய ரீதியில் 244 சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து சிறுகுற்றங்கள் புரிந்த மற்றும் தண்டப்பணம் செலுத்த முடியாத கைதிகள் 07 பேர் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஆறு ஆண்களும், ஒரு பெண் உட்பட ஏழு கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடுதலை செய்துவைக்கும் நிகழ்வு திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் தலைமையில் வசந்த குமார டேப் தலைமையில் நடைபெற்றபோது பிரதான ஜெயிலர், புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்களுக்கு கடற்படை பயிற்சி முகாம்

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் புத்தக கல்வியோடு மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை பங்குகொள்ளச்செய்யும் வகையில் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் ஆலோசனையில் கடற்பயிற்சி பாசறையொன்று அண்மையில் கல்லூரி திறந்த வெளியரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ரன்தம்பே தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி பயிற்சி நிலையத்தில் இடம்பெற வுள்ள விசேட கடற்படை பயிற்சிக்கு மாணவர்களை அழைத்துச்செல்லும் வகையில் மாணவர்களுக்கான முன்னாயத்த பயிற்சிகளை வழங்கும் வகையில் கல்லூரியின் கடற்படை பொறுப்பாசிரியர் பெலடூன் கொமாண்டர் மேஜர் கே.எம்.தமீமின் கண்காணிப்பின்கீழ் மாணவர்களுக்கு பயிற்சிகளும் அனுபவ ரீதியிலான பகிர்வும் இடம்பெற்றன.



# களுவாஞ்சிக்குடியில் மும்மதத்தவர்களுடன் அதிரடிப்படை முகாமில் வெசாக் நிகழ்வு






(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் விசேட அதிரடிப்படை முகாம் ஆகியவற்றில் விசேட வெசாக் நிகழ்வுகள் நேற்று முன்தினம் (15) மாலை இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் இந்நிகழ்வுகளில் வீதியில் பணித்த தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களும் கலந்துகொண்டு அங்கு அலங்கரிப்பட்டுள்ள வெசாக் பதந்தல்களை கண்டு இரசித்து வருவதோடு, தாகசாந்தி நிகழ்வுகளிலும் பங்கெடுத்துள்ளனர்.

# மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு




(கிண்ணியா நிருபர்)

தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக ஆழ்கடல் மீனவர்கள் பாதிப்புக் குள்ளாகியுள்ளனர். திருகோணமலை, சல்லி கிராம மீனவர்களும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக கடலுக்குச் செல்லமுடியாமல் வாழ்வாதார மீனவத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் சுமார் 40 லீற்றருக்கும் அதிகமான மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சென்றால் அது கிடைப்பதில்லை. ஏமாற்றுகிறார்கள். இதனால் ஆழ்கடலுக்கு இயந்திரப்படகு மூலம் செல்லமுடியாது. இதனை நம்பியே குடும்பத்தை நடத்துகின்றோம்.

இம்மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் தொழிலின்றி வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம் என்றும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# திருமலையில் ஆர்ப்பாட்டம், வன்முறைகளில் ஈடுபட்டதாக சந்தேகத்தின்பேரில் 15 பேர் கைது

## இது அரசின் சர்வாதிகாரத்தை காட்டுகிறது என்கிறார் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ரொஷான் அக்மீமன

(திருமலை நிருபர்)

திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டதாக சந்தேகத்தின்பேரில் 15இற்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பிரதேசத்திலேயே இவ்வாறு கைதுகள் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வீடுகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரினால் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டு, சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கைதானவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான ரொஷான்



அக்மீமன இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரளவின் வீடு சேதமாக்கப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குமாறு பொலிஸாரினால் வரவழைக்கப்படும் இளைஞர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலையில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள். இவ்வாறான கைதுகள் அரசின் சர்வாதிகாரத்தை வெளிக்காட்டுகிறது.

மேலும் நாட்டில் ஜனநாயகமான ஆட்சி ஒன்று அமையவேண்டும் என இளைஞர், யுவதிகள் வீதிக்கு இறங்கி இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்கும் இவ்வேளையில், இவ்வாறான கைதுகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கை வைத்து தற்போது கடலின் நடுவில் ஒரு தீவில் மறைந்து இருப்பதுடன், கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் இவ்வாறு சட்டவிரோத அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைதுசெய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிடின் இவர்கள் இருவரும் ஆளுக்கு ஒவ்வொரு தீவுகளில் மறையவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

மேலும் நாளைய தினம் திருகோணமலை நகரின் சமூக செயற்பாட்டாளர் ஒருவரை உப்புவெளி பொலிஸ் நிலையத்திற்கு வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# அரசுக்கு எதிரான போராட்டங்களை முடக்க விடுதலைப் புலிகளின் பெயரை உபயோகிக்காதீர்!

## இந்திய நாளிதழுக்கு எதிராக முன்னாள் போராளிகள் கண்டனம்




(திருமலை நிருபர்)

இந்தியாவின் நாளிதழான த ஹிந்து நாளிதழில் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் இலங்கையில் தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக வெளியிட்ட செய்தியானது தமிழ் மக்களிடையிலும் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் இல்லத்தில் நேற்று (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், நாட்டில் வலுவடைந்துவரும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் இணைந்து நாட்டில் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக பொய் வதந்திகளை பரப்பி வருவதாகவும் இவ்வாறான செயற்பாட்டினால் நாட்டில் தமிழ் மக்கள் உட்பட புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பெரும் அச்சத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அயல் நாடான இந்தியா சிங்கள அரசுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது தமிழீழப் போராட்டத்தில் அரசாங்கத்திற்கு ஆயுதபலம் மற்றும் இராணுவ பலத்தை வழங்கி எமது இனத்தை முற்றுமுழுதாக அளித்த செயற்பாடுகள் மட்டுமல்லாது, தற்போது தமிழ் ஈழத்திற்காக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டுசெல்ல முடியாமல் பெரும் கஷ்டத்தில் இருக்கின்ற இவ்வேளையில், இவ்வாறானதொரு தாக்குதல் ஒன்றினை நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய புலனாய்வுத்துறை அறிக்கையொன்று வெளியிட்டுள்ளதாக குறித்த நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. இதனால் தாம் பெரும் அச்சத்துடன் இருப்பதாகவும் இவ்வாறு உண்மைக்குப் புறம்பான இந்த செய்தியை முன்னாள் போராளிகள் என்ற வகையில் தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் போராட்டத்தில் பாதிக்கப்பட்டு சமூகத்தின் மத்தியில் சுமூகமான வாழ்வினை வாழ்ந்துகொண்டிருக்கும் தருவாயில் இந்திய அரசு இவ்வாறானதோர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. குறித்த அறிக்கையின் மூலம் எமது நாட்டிலுள்ள சமூகம் மீண்டும் எம்மை சந்தேகக்கண்ணோடு பார்ப்பது எமக்கு மனவேதனை அளிக்கின்றது எனவும் தெரிவித்தார்.

இறுதியாக இந்திய அரசுக்கு புனர்வாழ்வளிக் கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் என்ற வகையில் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். என்னிடம் ஆயுதம் இருக்கின்றது. அது எல்லாவற்றையும் விட பலம்வாய்ந்த எமது உயிர் என்பதை அவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

# மட்டு. நகரில் துவிச்சக்கரவண்டி - எரிவாயு சிலிண்டர் திருடிய இருவர் கைது

## 4 சைக்கிள்கள், கேஸ் சிலிண்டர் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள கூளாவடி, றொசாறியே வீதியில் எரிவாயு சிலிண்டர் துவிச்சக்கரவண்டிகளை திருடிவந்த இரண்டுபேரை நேற்று முன்தினம் (15) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கூளாவடி பிரதேசத்திலுள்ள கடை ஒன்றின் முன்னால் இருந்த எரிவாயு சிலிண்டர் ஒன்று சம்பவதினமான கடந்த 5ஆம் திகதி திருட்டுப் போயிருந்தது. இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமராவின் காட்சிப்பதிவுகளின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டுவந்த பொலிஸார், மோட்டர்சைக்கிள் ஒன்றில் எரிவாயு சிலிண்டர் ஒன்றை திருடிச்சென்ற நெல்லிக்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரை கைதுசெய்ததுடன், திருடப்பட்ட எரிவாயு சிலிண்டர் மற்றும் கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் ஒன்றையும் மீட்டனர்.

இதேவேளை, றொசாறியே வீதியில் கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை உறவினர் வீடு ஒன்றுக்கு துவிச்சக்கரவண்டியில் சென்று வீதியில் வைத்து பூட்டிவிட்டு வீட்டுக்குள் சென்று சுமார் 15 நிமிடத்தில் திரும்பிவந்து பார்த்தபோது துவிச்சக்கரவண்டி திருட்டுப் போயுள்ளதையடுத்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் அந்த பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமரா காட்சி பதிவுகளின் ஏறாவூர் லங்காமாத வீதியைச் சேர்ந்த 61 வயதுடைய ஒருவரை கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து 4 துவிச்சக்கரவண்டிகளை மீட்டுள்ளனர்.

இதில் மீட்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகளில் இரண்டு துவிச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்கள் அதனை அடையாளம் காட்டியுள்ளதாகவும் இரண்டு துவிச்சக்கரவண்டிகள் அடையாளம் காணப்படவில்லை எனவும், துவிச்சக்கரவண்டி திருட்டுப்போனவர்கள் பொலிஸ் நிலையம் சென்று அடையாளங்காட்டி பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விரு கொள்ளைச் சம்பவங்களில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் தொற்றா நோய் தொடர்பான விழிப்பூட்டல்



(நிந்தவூர் நிருபர்)

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களுக்கு தொற்றா நோய் தொடர்பான விழிப்புட்டல் கருத்தரங்கொன்று நேற்று முன்தினம் (15) சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஸனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தந்திருந்த பெண்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு கட்சி பேதங்களுக்கப்பால் ஒத்துழைப்பு வழங்குவோம்!

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தன் தெரிவிப்பு!

(கல்லடி நிருபர்)

கட்சி வேறுபாடுகளையோ, அரசியல் கணக்கு வழக்குகளையோ கணக்கிலெடுக்கும் நேரம் இதுவல்ல. இவை யாவற்றையும் கடந்து புதிதாக கடமையேற்றிருக்கும் பிரதமருக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் - என



முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் களநிலையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கடந்த சனிக்கிழமை மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பு மட்டக்களப்பு லேக் வீதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது மாபெரும் அரசியல் மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. இந்நிலையில், நாட்டின் பிரதமராயிருந்த மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான உடனடித் தீர்வாக புதிய பிரதமரின் நியமனமும், அவரது அனுபவம் மிக்க முன்னெடுப்புகளும் அமையும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு எமது தேசத்தின் ஒற்றுமைக்கும், சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கும், கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்துக்கும் பங்கம் ஏற்படாதவாறு எமது நாடாளுமன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதே இன்றைய சூழலில் ஆக்கபூர்வமானதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களின் அரசியல் இருப்பைப் பேணிப் பாதுகாப்பதற்கும், தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதாரக் கட்டமைப்பினை வலுவாக்கி, கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நிலைபேறான சூழலை உருவாக்குவதற்காக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும், அதன் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தனும் எத்தகைய தியாகங்களையும் செய்வதற்குத் தயாராக இருக்கின்றனர்.

இவ்வாறான பொருளாதார நெருக்கடி நிலையில் நாடாளுமன்றத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது மக்கள் வழங்கிய ஆணை மூலம் கிடைத்திருக்கின்ற நாடாளுமன்ற ஆசனத்தின் அதிகாரங்களைப் பூரணமாகப் பயன்படுத்த ஒரு போதும் தயங்காது - என்றார்.

## போடியார் புலம்பல்!



**இந்த வருஷம் மே 18இல் முள்ளிவாய்க்கால் நினைவு கொழும்பு காலிமுகத்திடலிலையும் செய்யப்போறாங்களாமே. இத அறிஞ்சுதான்போல புலிகள் தாக்கப்போறாங்களாம் எண்டு இந்தியப் பேப்பரில ஒரு செய்தியும் வந்தது எலுவா.**

**புலி தாக்குதோ என்னவோ இந்த மே 18 கனபேருக்கு புளிக்கரைக்கும் என்பது மட்டும் மெய்யா நடக்கும்.. இருந்து பாருங்கவன்..**

# ரஞ்சன் ராமநாயக்க மனிதாபிமானி

## அவர் விடுதலை செய்யப்படாதது துரதிர்ஷ்டவசமான நிலை என்கிறார் சஜித்



ரஞ்சன் திருடனோ அல்லது மோசடிக்காரனோ அல்ல. அவர் ஒரு மனிதாபிமானி - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று முன்தினம் (15) காலை பார்வையிட சென்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வெசாக் விடுமுறை தினத்தை முன்னிட்டு 240இற்கும் மேற்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். என்றாலும் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்படவில்லை. இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை.

திருடனோ, மோசடிக்காரனோ அல்லாத ரஞ்சன் ராமநாயக்க மனிதாபிமானமுள்ள ஒரு தலைவர். அவருக்கு பூரண சுதந்திரம் கிடைக்கும் முகமாகதான் போராடுகிறோம் - என்றார்.

# முந்தலில் கோப்பி தன்சல்





(ரஸீன் ரஸ்மின்)

முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட புளிச்சாக்குளம் புதுக்குடியிருப்பு முஹைதீன் ஜும்ஆப் மஸ்ஜித் நிர்வாகமும், ஊர்மக்களும் இணைந்து வெசாக் தினத்தை முன்னிட்டு கோப்பி தன்சல் வழங்கினர்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி நேற்று முன்தினம் (15) மாலை புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் புளிச்சாக்குளம் நகரில் கோப்பி வழங்கும் தன்சல் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்களும் கலந்துகொண்டு நல்லிணக்கம் தொடர்பாக உரையாற்றினார்கள்.

இதன்போது முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்பின்னர் வீதியில் பயணம் செய்த வாகன சாரதிகள், பொதுமக்களுக்கும் கோப்பி, பழங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் தொடர்ந்து மழை பெய்யும் சாத்தியம்

## மீட்புப் பணிகளுக்கு உதவ விமானப்படை தயார் நிலையில்



நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில், வெள்ள அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் முகமாக இலங்கை கடற்படையினர் 10 நிவாரணக் குழுக்களை மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் ஈடுபடுத்தியுள்ளது.

கடற்படை ஊடக தகவல்களின்படி மேற்கு கடற்படை கட்டளை பிரதேசத்தில் இரத்தினபுரியில் 04 நிவாரணக் குழுக்களையும் களுத்துறை புலத்சிங்கள மற்றும் பரகொட பகுதிகளில் தலா ஒரு குழுவையும் மற்றும் தெற்கு கடற்படை கட்டளை பிரதேசத்தில் தவலம மற்றும் நாகொட ஆகிய இடங்களுக்கு தலா 02 குழுக்களையும் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அனுப்பியுள்ளது. இந்தக் குழுக்களில் ஏற்கனவே சில பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மேலும், கடற்படையினர் மேற்கு கடற்படை கட்டளை பிரதேசத்தில் 18 நிவாரணக் குழுக்களையும், தெற்கு கடற்படை கட்டளை பிரதேசத்தில் 06 நிவாரணக் குழுக்களையும், வடமேற்கு கடற்படை கட்டளை பிரதேசத்தில் 18 அனர்த்த நிவாரணக் குழுக்களையும் தயார் நிலையில் வைத்துள்ளனர்.

இதற்கிடையில், அடையாளம் காணப்பட்ட 6 மாவட்டங்களில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்காக விமானம் மற்றும் மீட்புக் குழுக்களை இலங்கை விமானப்படை தயார் நிலையில் வைத்துள்ளது. இரத்மலானை, கட்டுநாயக்க, ஹிங்குராங்கொட மற்றும் அநுராதபுரம் விமானப்படைத் தளங்களில் விமானப்படை விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவை வழங்க தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டின் தென்மேற்கு பகுதியில் (மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும்) நிலவும் மலையுடன் கூடிய காலநிலை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக்கூடும். மேல் மாகாணத்தின் சில இடங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சுமார் 75 மில்லிமீற்றர் வரையில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று அது கூறுகிறது.

வடமாகாணத்திலும் அநுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மழை பெய்யும். ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நோய்வாய்ப்பட்ட நிலையில் மீனவரொருவர் மீட்பு

கிழக்கு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் நோய்வாய்ப்புக்குள்ளான மீனவரொருவர் கடற்படையினரால் நேற்று முன்தினம் (15) மீட்கப்பட்டுள்ளதுடன் அவரை சிகிச்சைக்காக அனுமதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மீன்பிடி துறைமுகத்தில் கடந்த இரண்டாம் திகதி மீன்படி நடவடிக்கைகளுக்காக சென்றிருந்த "சுந்தர் 04" என்ற நீண்டநாள் மீன்பிடி படகிலிந்த மீனவரொருவர் திடீர் சுகயீனத்துக்குள்ளாகியுள்ளதாக மீன்பிடித்துறை மற்றும் கடல் வள திணைக்களத்தினால் கடற்படை தலைமையகத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையிலேயே இவர் மீட்கப் பட்டுள்ளார். மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்திலிருந்து 33 கிலோமீற்றர் தொலைவில் இவர் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த மீனவரை உடனடியாக வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அதன்பின்னர் அவர் வாழைச்சேனை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

# யூரோக்களை உண்டியல் முறையில் விற்பனை செய்ய முயற்சித்தவர் கைது

சட்டவிரோதமாக உண்டியல் முறையில் விற்பனை செய்வதற்காக வெளிநாட்டு பணத்தொகையை வைத்தியருந்த நபரொருவர் பெபிலியான பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் விசேட சுற்றிவளைப்பு பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன் சந்தேகநபரிடமிருந்து 50 ஆயிரம் யூரோவும் மீட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு



கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வெளிநாட்டுப் பணத்தின் இலங்கை பெறுமதி 18.69 மில்லியன் ரூபா என்பதுடன் சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கிருலப்பனை சட்டவிரோத சொத்து விசாரணை பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு நிதிக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாக மாறியுள்ள உண்டியல் முறை, நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதுடன், அதுதொடர்பில் விசேட அதிரடிப்படை நாடுதழுவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இரங்கல் புத்தகத்தில் கையொப்பம்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி ஷேக் கலீபா பின் சயீத் அல் நஹ்யானின் மறைவுக்காக திறந்துவைக்கப்பட்ட இரங்கல் புத்தகத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவரின் இல்லத்தில் வைத்து கையொப்பமிட்டார்.

மாண்புமிகு ஷேக் கலீபா பின் சயீத் அல்-நஹ்யானின் மறைவுக்காக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை



அரசாங்கம் மற்றும் மக்களின் ஆழ்ந்த அனுதாபங்களை அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.









கொழும்பின் பல பிரதேசங்களில் நேற்று முன்தினம் (15) வெசாக் தின நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், அநேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வாகனங்கள் வரிசையில் காத்திருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

# கலவரத்துடன் தொடர்புடைய மேலும் 159 பேர் கைது



காலிமுகத்திடல், கொள்ளுப்பிட்டிய மற்றும் நாடளாவிய ரீதியில் நபர்களைத் தாக்கி பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் மேலும் 159 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று (16) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் (15) முன்னெடுக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகளின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் இதுவரை 398 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதிமுதல் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 159 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வும் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார்.

## காக்கை சிறகுக் கோட்பாட்டில்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

"உம்மா, 12 மணிக்கு முன்னர் வந்துவிடுவேன் என்று கூறியவாறே இரவு 8 மணிக்கு போன தம்பி திரும்பி வரவே இல்லை. உம்மா இன்னும் அவருக்காக அழுது காத்துக்கொண்டிருக்கிறார்"

"ஹெவ்லோக் விளையாட்டுக் கழகத்தினை வாங்கப்போவதாக வஸீம் கூறியிருந்தார். தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அவர் சொல்லவில்லை. நாங்கள் கவலைப்படுவோம் என்பதால் வஸீம் தனது பிரச்சினைகளை எங்களிடம் சொல்வதில்லை."

"வஸீமின் வாழ்வின் ஒரு பகுதியாகவே ஹெவ்லோக் விளையாட்டுக் கழகம் இருந்துள்ளது. அது அவரது வீட்டைப்போலவே இருந்தது. அவர் அதன் மீது அவ்வளவு நேசம் வைத்திருந்தார். அதற்காக எதையும் செய்வதற்கு அவர் ஆயத்தமாக இருந்தார்."

"இந்த விசாரணைகளை திசை திருப்புவதற்காக இட்டுக்கட்டப்பட்ட கதையே வஸீம் - யசாரா உறவுக் கதை."

" சாதாரணமானவர்கள் செய்கின்ற குற்றங்களை படித்தவர்கள் மறைக்கிறார்கள், சிலர் குறிப்பிட்ட காரணங்களுக்காக உண்மையான காரணத்தை மறைத்தார்கள். எனது தம்பி குறிப்பிட்ட குழுவின் சதித் திட்டத்திற்கு தன்னையறியாமல் இரையாகி விட்டார்."

"இது ஒரு திட்டமிட்ட கொலை. இதை மன்னிக்க முடியாது. எந்தக் குற்றமும் வெளிவராமல் மறைந்து விடாது. எனது உம்மாவின் பிரார்த்தனைகள் ஒருபோதும் வீண் போகாது" என வஸீம் தாஜுதீன் சகோதரி ஆயிஷா கடந்த 2019ஆம் ஆண்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலை இங்கு நினைவுகூர முடிகின்றது.

அவர் அன்று கூறிய வார்த்தைகள் இன்று உயிர்பெற்று அனைவருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

"வஸீம் தாஜுதீனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று நாங்கள் நம்பினோம் மற்றும் பிரார்த்தனை செய்யாத நாளே இல்லை'' என தாஜுதீனின் சகோதரர் அஷ்பான் தாஜுதீன் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று அந்தப் பிரார்த்தனையை பலர் கேட்பதை காண்கின்றோம் அதற்காக நான் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இந்தப் போராட்டம் பாரியது. இது முன்னெடுக்கப்படும், இது வெற்றி பெறும் என குறிப்பிட்டுள்ளார்.

வஸீம் தாஜுதீன் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ள நிலையில் குற்றவாளிகள் மறைக்கப்பட்டு வழக்கும் முற்றாக மூடப்பட்டு விட்டது. தேர்தல் காலங்களில் மாத்திரம் பேசும் தலைப்பாக இதனை வைத்துக்கொண்டிருந்தனர். இந்த ராஜபக்ஷர்கள் நாட்டின் பொருளாதாரத்தை மாத்திரமன்றி, அநியாயமாக பல உயிர்களையும் கொண்டுள்ளனர். இது அனைத்திற்கும் இன்று முழு நாடுகளின் மத்தியில் தலைகுனிய வேண்டிய நிலைமையில் இந்த ராஜபக்ஷர்கள் இருக்கின்றார்கள். ராஜபக்ஷர்களை விரட்டுவதற்கு உருவாகிய போராட்டக்களத்திலும் வஸீம் தாஜுதீனின் கொலைக்கு நீதி வேண்டும் என்ற பதாகைகளை காணமுடிந்தது.

வஸீம் மாத்திரமின்றி இவ்வாறு பலர் இந்த ராஜபக்ஷர்களால் அநியாயமாக கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும், நாடு மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். கள்வர்கள் கூட்டம் விரட்டியடிக்கப்படவேண்டும் என்பதே அனைவரினதும் கோரிக்கையாக உள்ளது. இலங்கையில் நீதி புதைகுழியில் புதைக்கப்படவில்லை என்பதை நிரூபிக்க வேண்டிய கடமைப்பாடு மக்களுக்கு இருக்கின்றது என்று கூறுவதில் ஐயமில்லை.

# உலக செய்திகள்



# ரஷ்யாவை எதிர்கொள்ள உக்ரைனுக்கு நேட்டோ இராணுவ உதவி

ரஷ்யாவுக்கு எதிராக தொடர்ந்து போரிட உக்ரைனுக்கு இராணுவ உதவி வழங்கப்படும் என நேட்டோ அமைப்பு அறிவித்துள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா போர் தொடுத்தது. இன்று 83 நாளாகவும் இரு நாடுகளுக்கிடையிலான மோதல் நீடித்துவருகிறது.

ரஷ்ய தாக்குதல்களால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரான கார்கீவ், கடற்கரை நகரான மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நகரங்கள் உருக்குலைந்துள்ளன.

இந்நிலையில், கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் மாகாணத்தைப் பிடித்து தனிநாடாக அறிவிக்க ரஷ்யா எடுத்துவரும் முயற்சிகளுக்கு உக்ரைன் இராணுவம் கடுமையான பதிலடி கொடுத்து வருகிறது. இதன்மூலம், ரஷ்யப் படைகளின் முன்னேற்றமும், வெற்றியும் தடுக்கப்பட்டு வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் நிதி மற்றும் இராணுவ உதவியளித்து வருகின்றன.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக தொடர்ந்து போரிட உக்ரைனுக்கு இராணுவ உதவி வழங்கப்படும் என நேட்டோ அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேட்டோ அமைப்பின் தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் தெரிவிக்கையில், உக்ரைன் படையினர் தங்களின் தாயகத்தைப் பாதுகாக்க தைரியமாக போரிட்டு வருகின்றனர். ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைன் வெற்றிபெற முடியும் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி வெளியிட்டுள்ள ட்வீட் பதிவில்,

“நமது தைரியம் உலகையே ஈர்க்கிறது. நமது இசை, ஐரோப்பாவை வென்றது. அடுத்த ஆண்டு உக்ரைன், யூரோவிஷன் பாடல் போட்டியை நடத்தும்” என குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை நிவாரண நிதிக்கு ரூ.10 ஆயிரம் வழங்கிய சாத்தான்குளம் யாசகர்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது



தூத்துக்குடி சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த யாசகர் ஒருவர் இலங்கை நிவாரண நிதிக்கு ரூ. 10 ஆயிரத்தை (இந்திய ரூபாப்படி) அம் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை அடுத்துள்ள பகுதியை சேர்ந்தவர் பூல்பாண்டி. யாசகம் மூலம் தனது வாழ்வாதாரத்தை ஈட்டிவரும் இவர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு திங்கட்கிழமை வந்தார்.

யாசகம் மூலம் தான் சேமித்து வைத்திருந்த ரூ. 10 ஆயிரத்தை இலங்கை நிவாரண நிதிக்காக மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப் போவதாக தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் வசித்தபோது இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நட்டு வைத்துள்ளதாகவும், தமிழகத்தில் 400இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு நிதியுதவி அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். மாவட்ட ஆட்சியரை சந்தித்த அவர், தனது வருத்தத்தை தெரிவித்து ரூ. 10ஆயிரத்தை வழங்கினார்.

## புட்டினுக்கு புற்றுநோய்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரிட்டன் உளவாளியொருவர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்டோபர் ஸ்டீலி என்ற நபர் முன்பு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருப்பதாக எழுதி பரபரப்பை ஏற்படுத்தியவர். தற்போது ரஷ்யாவின் பல்வேறு தரப்புத் தகவல்களின்படி புட்டின் மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புட்டினுக்கு மிகவும் நெருக்கமான தன்னார்வலர் ஒருவரும் புட்டின் உடல்நிலை இரத்தப் புற்றுநோயால் மிகவும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ரஷ்யாவின் வெற்றிவிழாக் கொண்டாட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி புட்டின் தொடர்ந்து இருமிக்கொண்டு இருந்தார் என்றும் பச்சை ஆடையால் கால்களை மறைத்திருந்தார் என்றும் புகைப்பட வீடியோ காட்சிகள் தெரிவிக்கின்றன.

## வறட்சி பாதித்த பட்டியலுள் உலகின் 23 நாடுகள்

பாகிஸ்தான் உள்ளிட்ட 23 நாடுகளை வறட்சி பாதித்த நாடுகளாக ஐ.நா. அறிவித்துள்ளது.

ஐ.நா. பாலைவனமாதல், வறட்சி தினம் ஜூன் 17ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில், பாலைவனமாதலை எதிர்கொள்வதற்கான ஐ.நா. மாநாடு வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்:

கடந்த சில நூற்றாண்டுகளாக ஆசியாவில்தான் அதிகம் பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதிலும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், அங்கோலா, பிரேஸில், புர்கினா ஃபேசோ, சிலி, எத்தியோப்பியா, ஈரான், ஈராக், கஸகஸ்தான், கென்யா, லெசோட்டோ, மோரிடேனியா, மடகாஸ்கர், மாலாவி, மொசம்பிக், நைஜர், சோமாலியா, தெற்கு சூடான், சிரியா, அமெரிக்கா, ஜாம்பியா ஆகிய நாடுகள் வறட்சி பாதித்த நாடுகளின் பட்டியலில் இணைந்துள்ளன.

எதிர்வரும் 2050இற்குள் பரப்பளவில் இந்தியா, பாகிஸ்தானுக்கு நிகரான மேலும் 40 இலட்சம் சதுரகிலோமீற்றர் இயற்கை பகுதிகள், வறட்சியின் பிடியில் சிக்கி, அங்கு வறட்சி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும்.

புவியின் 40 சதவீத நிலப்பரப்பு சீரழிந்து வருகிறது. இதனால் சரிபாதி மனிதகுலமும், உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 50 சதவீதமும் பாதிக்கப்படும். நவீன உலக வரலாற்றில் மனித இனம் இதுபோன்ற இடர்ப்பாட்டை முன்னெப்போதும் சந்தித்தது கிடையாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கிரீஸில் தென்பட்டது ‘சூப்பர் பிளார் ப்ளெட் மூன்’

கிரீஸில் சந்திர கிரகணத்தின் ‘சூப்பர் பிளார் ப்ளெட் மூன்’ காணப்பட்டது. சூரியனின் ஒளி நிலவின் மீது படாமல் பூமி மறைக்கும்போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது.

ஏதென்சிலுள்ள புராதன கிரேக்க ஆட்சியாளர் பசைடன் கோவிலின் பின் சந்திர கிரகணம் அதிகளவில் தென்பட்டது. சூப்பர் பிளார் ப்ளெட் மூனை காண அதிகளவிலான மக்கள் திரண்டனர்.மே மாதத்தில் சந்திர கிரகணம் ஏற்பட்டதால் பூக்கள் பருவ காலத்தை குறிக்கும் வகையில் பிளார் மூன் என தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த அல்கான்குயின் பழங்குடியின மக்கள் பெயரிட்டுள்ளனர்.

## 330 அடி பள்ளத்தில் கவிழ்ந்த பஸ்: 11 பேர் பலி; 34 பேர் படுகாயம்



பெருவில் 330 அடி செங்குத்தான பள்ளத்தில் பஸ்ஸொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளதுடன், 34 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தென் அமெரிக்க நாடான பெருவின் தலைநகர் லிமா நோக்கிச் சென்ற பஸ் கட்டுப்பாட்டை இழந்து 330 அடி செங்குத்தான பள்ளத்தில் கவிழ்ந்தது. பள்ளத்தாக்கில் பலமுறை பஸ் உருண்டு உருக்குலைந்தது.

சம்பவத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்த நிலையில், 34 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அருகிலிருந்த மக்களின் உதவியுடன் விபத்தில் சிக்கியவர்களை அதிகாரிகள் மீட்டனர்.

## ரஷ்யப் படைகளைத் தடுக்க செயற்கை வெள்ளத்தை ஏற்படுத்திய உக்ரைன் படை



உக்ரைன் தலைநகர் கீவ்வை நோக்கி முன்னேறி வந்த ரஷ்யப் படைகளை தடுத்து நிறுத்துவதற்காக திறந்துவிடப்பட்ட அணையால் இன்றளவும் டெமிடிவ் கிராமம் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது.

போர் ஆரம்பித்தபோது, ரஷ்யப் படைகளை தடுப்பதற்காக இர்பின் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையை உக்ரைன் இராணுவத்தினர் திறந்துவிட்டு செயற்கை வெள்ளத்தை ஏற்படுத்தினர்.

தலைநகர் கீவ்லை கைப்பற்றும் எண்ணத்தை கைவிட்ட ரஷ்யப் படைகள் தற்போது டான்பாஸ் பகுதி நோக்கி தங்கள் கவனத்தை திசை திருப்பின.

2 மாதங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட இந்த வெள்ளத்தால் இன்றளவும் மக்கள் ரப்பர் படகுகளில் பயணித்து வருகின்றனர்.

## சீனாவில் உருவாக்கப்பட்ட மிதக்கும் ஆகாய கப்பல்



சீனாவில் உருவாக்கப்பட்ட ‘ஜிமு நம்பர் 1’ என பெயரிடப்பட்ட மிதக்கும் ஆகாய கப்பல் 9,032 மீற்றர் உயரத்தில் இயக்கி சோதித்து பார்க்கப்பட்டது.

எவரெஸ்ட் சிகரத்தில் 4,300 மீற்றர் உயரத்திலுள்ள தளத்திலிருந்து விநாடிக்கு 30 மீற்றர் வேகத்தில் மேல் நோக்கிச் சென்ற அந்த மிதக்கும் ஆகாய கப்பல், 9032 மீற்றர் உயரத்தை எட்டியது.

அங்கிருந்தபடி, மிதக்கும் கப்பலின் மீது பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவி வளிமண்டல வாயுக்கள் குறித்தும், வானில் நிகழும் நீராவி பரிமாற்றம் குறித்தும் தரவுகளை பதிவுசெய்யும் என சீனா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேபாளத்தின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அங்குரார்ப்பணம்

நேபாளத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கௌதம புத்தர் சர்வதேச விமான நிலையம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இது புத்தரின் பிறப்பிடமான லும்பினியிலிருந்து சில கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் அமைந்துள்ள திரிபுவன் சர்வதேச விமான நிலையத்துக்குப் பிறகு, அந்நாட்டின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக கௌதம புத்தர் சர்வதேச விமான நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இது சுமார் 74 ஆண்டுகளுக்குப் பின் கட்டப்பட்டுள்ளது.

புத்த பூர்ணிமாவை முன்னிட்டு நேற்றுக் காலை இந்த விமானம் நிலையம் தொடங்கிவைக்கப்பட்டது. திங்கட்கிழமை காலை ஜஸீரா ஏர்வேஸ் நிறுவனத்தின் விமானம், கௌதம புத்தர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து முதல் விமானமாக குவைத்துக்குப் புறப்பட்டுச் சென்றது.

எனினும், வழக்கமான நடைமுறைகள் முடிந்து விமான நிலையம் ஜூன் 12ஆம் திகதிதான் மக்கள் பயன்பாட்டுக்கு வரவிருக்கிறது.



## யோகாவில் அசத்தும் தீபிகா

ஹிந்தியில் ‘சர்க்கஸ்’, ‘பைட்டர்’ மற்றும் தெலுங்கில் பிரபாஸ் உடன் இணைந்து ‘ப்ரொஜெக்ட் கே’ போன்ற படங்களில் நடித்து வருகிறார் பொலிவுட் நடிகை தீபிகா படுகோனே. 2018ஆம் ஆண்டு பொலிவுட் நடிகர் ரன்வீர் சிங்கை திருமணம் செய்துகொண்ட பிறகும் சினிமாவில் பிஸியாக நடித்துவரும் தீபிகா படுகோனேவை இன்ஸ்டாவில் 66 மில்லியன் பேர் பின்தொடருகிறார்கள். இந்நிலையில் தற்போது யோகா செய்யும் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார் தீபிகா. அந்த புகைப்படங்களுக்கு ரசிகர்கள் ஏகோபித்த லைக்குகள் மற்றும் கமெண்டுகளை அள்ளிக்கொடுத்து வைரலாக்கி வருகின்றனர்.



# கன்னி போட்டியிலேயே அசத்திய பத்திரணவை பாராட்டிய தோனி

தனது கன்னி ஐ.பி.எல். போட்டியில் விளையாடிய குட்டி மாலிங்க என அழைக்கப்படும் இலங்கையைச் சேர்ந்த இளம் பந்துவீச்சாளர் மதீஷ பத்திரண பலரினதும் பாராட்டை பெற்றுள்ளார்.

2022 ஐ.பி.எல். முழுக்க முழுக்க இளம் வீரர்களுக்கான தொடராக அமைந்துள்ளது. குறிப்பாக, இளம் ஃபாஸ்ட் பவுலர்களுக்கான தொடராக இருந்திருக்கிறது. உம்ரான் மாலிக், மூசின் கான், யஷ் தயால், முகேஷ் சௌத்ரி, சிமர்ஜீத் சிங் ஆகிய இந்தியாவைச் சேர்ந்த இளம் ஃபாஸ்ட் பவுலர்கள் அருமையாக பந்துவீசி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளனர். அந்தவரிசையில், இலங்கையைச் சேர்ந்த இளம் ஃபாஸ்ட் பவுலர் மதீஷ பத்திரணவும் இணைந்துள்ளார்.

லசித் மாலிங்காவை போன்ற பவுலிங் ஆக்ஷனைகொண்ட பத்திரணவை அடம் மில்னேவுக்கு மாற்று வீரராக எடுத்தது சி.எஸ்.கே. அணி. ஆனால், அவருக்கு ஆடும் லெவனில் இடம் கிடைக்காமல் இருந்துவந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் குஜராத் டைட்டன்ஸுக்கு எதிரான போட்டியில் அவருக்கு ஆட வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த வாய்ப்பை அருமையாக பயன்படுத்தி சிறப்பாக பந்துவீசினார் பத்திரண.

அறிமுகப் போட்டியின் முதல் பந்திலேயே சுப்மன் கில்லை வீழ்த்தி அசத்தினார். ஹர்திக் பாண்டியாவையும் அவர்தான் வீழ்த்தினார். அறிமுகப் போட்டியிலேயே 2 விக்கெட்டை வீழ்த்தி அசத்தினார். போட்டிக்குப் பின் பத்திரன குறித்து பேசிய எம்.எஸ்.தோனி, "பத்திரண மிகச்சிறந்த டெத் பவுலர். மாலிங்கவை போலவே வீசுகிறார். அவரது பவுலிங் ஆக்ஷனில் தவறு நடப்பதற்கான வாய்ப்பு அதிகம். அவருக்கு பவுன்ஸும் பெரியளவில் இருக்காது. ஆனால், ஸ்லோயர் பந்துகளை அருமையாக வீசுகிறார்" என கூறினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



# ஆறாவது முறையாக இத்தாலி ஓபன் சம்பியனான ஜோகோவிச்

## ஆண்டின் முதல் சம்பியன் பட்டம்

இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற இத்தாலியன் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியனான செர்பியாவை சேர்ந்த 34 வயதான நோவக் ஜோகோவிச், ஆறாவது முறையாக இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இது நடப்பு ஆண்டில் அவர் வென்றுள்ள முதல் சம்பியன் பட்டமாகும்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற்ற ஆஸி. ஓபன் டென்னிஸ் தொடரில் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத காரணத்தால் அவர் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை. தொடர்ந்து சில பிரதான டென்னிஸ் தொடர்களில் அவர் விளையாடவில்லை. அதேநேரத்தில் இதற்கு முன்னதாக டுபாய் டென்னிஸ் சம்பியன்ஷிப், மெட்ரிட் ஓபன், செர்பிய ஓபன் போன்ற டென்னிஸ் தொடர்களில் விளையாடியிருந்தார்.

இந்நிலையில், இத்தாலி ஓபன் தொடரில் பங்கேற்று விளையாடிய அவர் அனைத்து போட்டிகளிலும் நேர் செட் கணக்கில் ஆட்டத்தை வென்று அசத்தியுள்ளார்.

இதன் மூலம் ஆறாவது முறையாக அவர் இத்தாலி ஓபன் பட்டத்தை வென்றுள்ளார். இறுதிப் போட்டியில் சிட்சிபாஸை 6 - 0, 7 - 6 என்ற கணக்கில் வீழ்த்தினார்.

முன்னதாக, அரையிறுதியில் வெற்றி பெற்றதன் மூலம் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஆயிரம் வெற்றிகளை பதிவு செய்த வீரர் என்ற மைல்கல்லை எட்டினார் ஜோகோவிச். இந்த சாதனையை படைத்த ஐந்தாவது வீரரானார்.

பிரெஞ்ச் ஓபன் தொடருக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், அவருக்குக் கிடைத்துள்ள இந்த வெற்றி கூடுதல் நம்பிக்கையை கொடுக்கும் என சொல்லப்படுகிறது.

இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவில், நடப்பு சம்பியனான போலந்தின் இகா ஸ்வியாடெக் சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.

உலகின் நம்பர்-1 வீராங்கனையான ஸ்வியாடெக் இறுதிப் போட்டியில் 6-2, 6-2 என்ற நேர் செட்களில் டுனீசியாவைச் சேர்ந்தவரும், போட்டித்தர வரிசையில் 9ஆம் இடத்திலிருந்தவருமான ஆன்ஸ் ஜாபியூரை வீழ்த்தினார். இது, இப்போட்டியில் அவர் வெல்லும் 5ஆவது பட்டமாகும்.

# சைமண்ட்ஸுக்கு மணல் சிற்பம் வடித்து அஞ்சலி




கார் விபத்தில் உயிரிழந்த ஆஸி. கிரிக்கெட் அணியின் முக்கிய சகலதுறை வீரர் அண்ட்ரூ சைமண்ட்ஸுக்கு இந்தியாவைச் சேர்ந்த மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் மணல் சிற்பம் வடித்து அஞ்சலி செலுத்தினார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்காக 198 ஒருநாள், 26 டெஸ்ட் மற்றும் 14 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடிய அண்ட்ரூ சைமண்ட்ஸ் தனது 46ஆவது வயதில் கார் விபத்தில் உடனே பலியானார். அவரது மறைவுக்கு முன்னாள் மற்றும் இந்நாள் கிரிக்கெட் வீரர்கள், ரசிகர்கள் என பலரும் தங்களது அஞ்சலியை செலுத்தி வருகின்றனர். இந்நிலையில், இந்தியாவின் பிரபல மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் தனது பாணியில் அஞ்சலி செலுத்தியுள்ளார். அதற்காக ஒடிசா மாநிலம் புரி கடற்கரையில் சைமண்ட்ஸுக்கு மணலில் சிற்பம் வடித்து அஞ்சலி செலுத்தியுள்ளார். சைமண்ட்ஸ், சகலதுறை வீரர் என்பதை குறிப்பிடும் விதமாக கிரிக்கெட் பேட் மற்றும் பந்தை அவரது உருவச்சிலைக்கு பின்பக்கம் இருக்கும்படி சிற்பம் செய்துள்ளார்.

# ப்ளேஓப் வாய்ப்பை உறுதியாக்கிய ராஜஸ்தான்; நெருக்கடியில் லக்னோ

லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணியுடனான போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வெற்றிபெற்றதால் ராஜஸ்தான் அணி இரண்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளதுடன், ப்ளேஓப் சுற்றுக்குத் தெரிவாகும் வாய்ப்பை கிட்டத்தட்ட உறுதிசெய்துள்ளது.

குறித்த போட்டியில் ராஜஸ்தான் அணி லக்னோவை 159 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினால், 2ஆவது இடத்திற்கு முன்னேறிவிடலாம் எனக் கணிக்கப்பட்டிருந்த நிலையில், அதேபோல் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது. ராஜஸ்தான் அணி அடுத்த லீக் போட்டியில் சென்னையை எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டியில் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

மறுபுறம் லக்னோ அணி அடுத்த போட்டியில் கொல்கத்தா அணியை எதிர்கொள்ளவுள்ளது. இதில் படுதோல்வியை சந்தித்தால், 16 புள்ளிகளுடன் நெட் ரன்ரேட் மைனஸிற்கு சென்றுவிடும். இதனால், மெகா தோல்வியை தவிர்த்தாலே, ப்ளேஓப் வாய்ப்பு உறுதியாகிவிடும். தற்போது நான்காவது இடத்தில் 14 புள்ளிகளுடன் இருக்கும் ஆர்.சி.பி. அணியின் நெட் ரன்ரேட்டை -0.323 ஆக உள்ளது. மேலும் கடைசி போட்டியில் பலம் வாய்ந்த குஜராத் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இந்த அணியை எதிர்த்து மெகா வெற்றியை பெற்றால் மட்டுமே, ப்ளேஓப் வாய்ப்பு இருக்கும். அப்படி ஆர்.சி.பி. வெற்றிபெற்றாலும், ப்ளேஓப் செல்ல இரண்டு அணிகளில் வெற்றி, தோல்வியையும் கணக்கிற்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது.




# ஈக்குவடோர் அணியில் தகுதியற்ற வீரர்



(ரமணி)

உலகக் கிண்ண தகுதிச் சுற்று ஆட்டங்களில் தகுதியற்ற ஒரு வீரரை ஈக்குவடோர் களமிறக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து பீபா ஒழுங்குக் குழு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

ஈக்குவடோர் அணிக்காக உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகளில் விளையாடிய பைரன் காஸ்டிலோ உண்மையில் கொலம்பியாவில் பிறந்தவர் என்றும் ஈக்குவடோர் அதிகாரிகள் கூறுவதை விட மூன்று வயது மூத்தவர் என்றும் சிலி உதைபந்தாட்ட கூட்டமைப்பு குற்றம் சாட்டுகிறது. எட்டு தகுதிகாண் போட்டிகளில் காஸ்டிலோ விளையாடினார்.

விசாரணை தொடங்கியதைத் தொடர்ந்து, ஈக்குவடோர் உதைபந்தாட்ட கூட்டமைப்பு, பெருவியன் உதைபந்தாட்டச் சங்கம் ஆகியவை பீபா ஒழுங்குமுறைக் குழுவிடம் தங்கள் நிலைப்பாட்டை சமர்ப்பித்தன. ஏப்ரல் 2021இல் ஈக்குவடோர் வடார் நீதிமன்றம், காஸ்டிலோ ஈக்குவடோர் நாட்டவர் என்றும், நவம்பர் 10, 1998 அன்று ஈக்குவடோரில் பிறந்தவர் என்றும் தீர்ப்பளித்தது.

காஸ்டிலோ ஜூலை 25, 1995இல் கொலம்பியாவிலுள்ள டுமாக்கோவில் பிறந்தார் என்பதற்கு ஆதாரம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. காஸ்டிலோ மீதான விசாரணையில் அவர் கொலம்பியனாக இருப்பதை உறுதிசெய்ததாகவும், சிவில் விசாரணையில் வீரர் வழங்கிய பிறப்புச் சான்றிதழானது மற்ற பதிவுகளுடன் முரண்படுவதாகவும், மோசடி செய்யக்கூடியதாகவும் குற்றஞ் சாட்டப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான உலகக் கிண்ண குரூப் சுற்றுப் போட்டியில் கட்டார், நெதர்லாந்து, ஆபிரிக்க சம்பியன் செனகல் ஆகிவற்றுடன் ஈக்குவடோர் அணி உள்ளது.

## தேசபந்து...

சனத் நிஷாந்த உள்ளிட்ட பலர் கைது செய்யப்படலாம் என அறிய முடிகின்றது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ள மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த உள்ளிட்ட 24 பேரை உடனடியாக கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாக உயர் மட்ட தகவல்கள் தெரிவித்தன. வன்முறை சம்பவம் தொடர்பில் அடையாளம் காணப்பட்ட இந்த 24 பேரும் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் விரைவில் இவர்கள் கைது செய்யப்படலாம் என அறிய முடிகின்றது.

இதேவேளை, வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 25 பேரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யுமாறும் சட்டமா அதிபரினால் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராச்சி ஆகியோர் இதில் அடங்குவதாக அறிய முடிகின்றது.

இதேவேளை, கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு முக்கிய காரணமாக இருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை கைது செய்யுமாறுகோரி, சோஷலிச இளைஞர் சங்கம் பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## மிக் கொள்வனவே...

செய்தித்தாளில் வெளியான மிக் உடன் படிக்கை தொடர்பான தகவல்களே, அவரது கொலைக்கான முக்கிய நோக்கத்தை உருவாக்கியிருக்கலாம் என்று தாம் நம்புவதாக, இலங்கையின் முன்னாள் பொலிஸ் அதிகாரி நிசாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இவர், 2019இல் கோட்டாபயவின் ஆட்சி வந்தவுடன் சுவிட்ஸர்லாந்துக்கு தப்பிச் சென்றவராவார்.

இந்நிலையில் நெதர்லாந்து ஹேக்கில் கடந்த 12ஆம் திகதியன்று சர்வதேச பத்திரிகை சுதந்திர அமைப்புகளின் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் நடைபெற்ற லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயத்தில் அவர் சாட்சியம் அளித்தார்.

இதன்போது லசந்தவின் கொலையாளிகள் பயன்படுத்திய கைத்தொலைபேசிகளின் கோபுரப் பதிவுகள் மூலம் அடையாளம் காணப்பட்டதாக நிசாந்த சில்வா குறிப்பிட்டார். விக்ரமதுங்கவுடன் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சியங்களும் இந்த விசாரணையின்போது பதிவு செய்யப்பட்டன.

அவர்கள் இலங்கையில் ஊடகவியலாளர்கள் தமது பணிகளை மேற்கொள்வதில் எதிர்கொள்ளும் பல தடைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

முக்கிய சாட்சிகளான சந்தியா எக்னெலிகொட, பாஷான அபேவர்தன, தில்ருக்ஷி ஹந்துன்நெத்தி மற்றும் முன்னாள் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பரிசோதகர் நிஷாந்த சில்வா ஆகியோரிடமிருந்து சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

2010 ஜனவரியில் காணாமல்போன கேலிச்சித்திர ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, அந்த நேரத்தில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை மற்றும் தமது கணவர் காணாமல் போனதற்கு காரணமான நிகழ்வுகளை விரிவாக விளக்கினார்.

தனது மொட்டையடிக்கப்பட்ட தலை மற்றும் கறுப்பு உடையைப் பற்றி குறிப்பிடுகையில், இரண்டு ஆண் குழந்தைகளின் தாயான தனது கணவரின் வழக்கு தீர்க்கப்படும் வரை மீண்டும் தலைமுடியை வளர்க்கவோ அல்லது கறுப்பு நிறத்தைத் தவிர வேறு எதையும் அணியவோ கூடாது என்ற முடிவை எடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

2006ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளரான பிரபாஷன அபேவர்தன, புலம்பெயர்ந்து வாழும் ஊடகவியலாளர், குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் 2005ஆம் ஆண்டின் கொடூரமான காலத்தில் என்னென்ன துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதை விரிவாக விளக்கினார்.

விக்ரமதுங்க படுகொலை செய்யப்படும் வரையில் அவருடன் பணியாற்றிய ஊடகவியலாளர் தில்ருக்ஷி ஹந்துன்நெத்தி, மிக் விமான ஒப்பந்தம் தொடர்பில் செய்தி அறையில் தமது ஆசிரியருடன் பணிபுரிந்த நினைவுகள் தொடர்பில் விளக்கினார்.

இதேவேளை, விசாரணையில் சாட்சியமளித்த லசந்த விக்ரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்ரமதுங்கவின் சார்பில் முன்னிலையான மனித உரிமைகள் சட்டத்தரணி நுஷின் சர்க்கரட்டி, லசந்தவின் மகள் சார்பில் வாசிக்கப்பட்ட வாக்குமூலத்துடன் விசாரணையை ஆரம்பித்தார்.

ராஜபக்ஷவின் தவறான ஆட்சி மற்றும் சர்வாதிகார ஆட்சியின் கீழ் பல வருடங்களாக துன்பங்களை அனுபவித்து வந்த மக்கள் ஒரே கடுமையான குரலில் எழுந்து, இந்த தவறான தலைவர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேறுமாறு கோருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், குறித்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜூன் மாதம் வெளியாகவுள்ளது.

## ரணில் அரசை...

பதவிகளையும் ஏற்பதாக அறிவித்திருக்கின்றார்.

சுமந்திரன் கொஞ்சம் நாசூக்காக அரசாங்கத்துடன் இணைய மாட்டோம். ஆனால், தவிசாளர் பதவியினை ஏற்பதாக கூறியிருந்தார்.

ஆனால், அதையும் தாண்டி பெரும் தேசியவாதி, பொட்டுத்தாடி ஐயா விக்னேஸ்வரன் ஐயா தான் அமைச்சர் பதவி ஏற்க தயாராக உள்ளதாக தகவல் வருகிறது. எனவே, தமிழ் மக்கள் ஒன்றினை விளங்கிக்கொள்ள வேண்டும். எமது இனப்படுகொலைகளை மேற்கொண்ட ராஜபக்ஷ தன்னுடைய ஆட்சி, தன்னுடைய குடும்ப ஆட்சி, தன்னுடைய தரப்பை பாதுகாப்பதற்கு மேற்கிலும் இந்தியாவிலும் சரணடைந்திருக்கின்ற இந்த நிலையில், ரணில் விக்ரமசிங்க நியமனம் அந்த நியமனத்தை வைத்து மேற்கும் இந்தியாவும் விரும்பின வகையிலே தமிழ் அரசியல் கட்சிகள் என்று சொல்லக்கூடிய தமிழ் மக்களின் வாக்குகளை பெற்ற தமது கட்சிகளும் கூட இன்றைய தினம் இனப்படுகொலையாளியின் ஆட்சிக்கு முண்டுகொடுக்கப் போகின்றார்கள். போன முறை கூட இவ்வாறு காப்பாற்றினர்.

அதேபோல, இந்த முறை கோட்டாபய முதுகெலும்பில்லாத தமிழ்க் கட்சியுடன் இணைந்து மீண்டும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட நீதியைகோரி போராடுகின்ற தமிழ் மக்களுக்கு முகத்தில் அறையும் வகையில் அந்த தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பெற்ற தமிழ்க் கட்சிகள் இன்றைக்கும் செயற்படுகின்றன - என்றார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7